Registered as a news paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 26 ஆம நாள் துல்கஃதா 13 (8-4-63) திங்கட்கிழமை இதழ் 59

# மூவர் தலைமையில் இன்று 'தமிழியக்கம்'

## காலை தபால் நிலையம் முன் ஆரம்பமாகும்

## துண்டுப்பிரசுரம் கொடுத்து வேண்டுகோள் விடுப்பர்

யாழ்ப்பாணம், திங்கள்

**தமிழரசுக்கட்சியின் எல்லாம் தமிழ்இயக்க வாரம் இன்று யாழ்ப்பாணம் தபால் நிலையததின் முன் ஆரம்பமாகிறது. தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் செனட்டர் ஜி. நல்லையா, வழக்கறிஞர் எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் தபால்நிலையத்தின் முன்னின்று அங்குவரும் பொதுமக்களிடம் தங்கள் அலுவல்களைத் தமிழில் செய்யுமாறு கேட்டுக் கொள்வர்.**

**தபால் நிலையத்துக்கு வரும் பொது மக்களிடம் காசுக்கட்டளைகள், தந்திப்பத்திரங்கள் முதலியவைகளையும் தபால் விலாசங்களையும் தமிழில் எழுதுமாறு இவர்கள் மூவரும் கேட்டுக் கொள்வார்கள். தமிழ்மக்கள் தங்கள் நாளாந்த அலுவல்களைத் தமிழில் செய்ய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தும் துண்டுப் பிரசுரங்களையும் இவர்கள் விநியோகிப்பார்கள்.**

நேற்று வவனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் 'எல்லாம் தமிழ் இயக்கம்' எப்படி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதுபற்றியும் அதை நாடு முழுவதிலும் எப்படி விஸ்தரிப்பதென்பதுபற்றியும் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில்தான் இன்று தபால்நிலையத்தின், முன் திரு. இராசமாணிக்கம் தலைமையில் இயக்கத்தை ஆரம்பிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. நேரடி நடவடிக்கைபற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் நேரடி நடவடிக்கைப் பொறுப்பு நேரடி நடவடிக்கைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

வவனியா பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டம் அந்தரங்கமாக நடைபெற்றது.

### தமிழியக்க வாரப் பிரசாரக் கூட்டம்

தமிழரசுக் கட்சி நடத்தும் தமிழியக்க வாரப் பிரசாரக் கூட்டங்கள் பின்வரும் இடங்களில் தொகுதி வாரியாக நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது பிரசாரக் கூட்டம் உடுப்பிட்டியில் நடைபெற ஏற்பாடகியுள்ளது. மாலி சந்தைமைதானத்தில் திரு. க. ஜெயக்கொடி தலைமையில் இக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.



இராசமாணிக்கம்

செவ்வாய்க்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தை மைதானத்திலும், புதன்கிழமை உடுவில், காங்கேசன் துறை இரு தொகுதிகளுக்குமான பிரசாரக் கூட்டம் சுன்னாகத்திலும், வியாழக்கிழமை சாவகச்சேரி சந்தை மைதானத்திலும், வெள்ளிக்கிழமை கோப்பாயிலும், சனிக்கிழமை வட்டுக்கோட்டை, வடக்கம்பரையிலும் திங்கட்கிழமை பருத்தித்துறையிலும் நடைபெறவிருக்கிறது.

இப்பிரசாரக் கூட்டங்களில் வடபகுதி தமிழரசு எம். பி.க்கள் அனைவரும் கலந்துகொள்வர் எனத் தெரியவருகிறது.

### தமிழ்க்கடித உறைகள்

தமிழியக்க வாரத்தைத் தீவிரப் படுத்தும் வகையில் தமிழ் சுலோகங்கள் பொறிக்கப்பட்ட கடித உறைகள் இன்று விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

கொழும்பிலிருந்து கடித உறைகள் நேற்று யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டன. இக் கடித உறைகளில் பலவிதமான தமிழ் சுலோகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

---

## "ஸீட்டோ" மகாநாடு

வாஷிங்டன், ஏப். 7

வருகிற திங்கட்கிழமை "ஸீட்டோ" ஒப்பந்த நாடுகளின் 8 மந்திரிகள் 2 வருடங்களுக்குப் பின் மீண்டும் கூடி லாவோஸ் நிலைமை பற்றி ஆலோசிப்பர்.

---

## பொன்னுடை போர்த்தினர்

யாழ்ப்பாணம், திங்கள்

அண்ணாமலை இசைத் தமிழ் நிலைய தமிழிசைப்பெருவிழாவில் டாக்டர் திரு. பி. எஸ். சுப்பிரமணியத்தின் வள்ளத் தன்மையைப் பாராட்டி திரு. கே. பி. ஹரன் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார் பல கலைஞர்களின் இசைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

# நேரடி நடவடிக்கை இப்போது இல்லை!

## வவனியா மகாநாட்டில் அறிவிப்பு

வவனியா, திங்கள்

மன்னார் மகாநாட்டில் தமிழரசுக்கட்சி செய்த தீர்மானப்படி, பொதுஜன அபிப்பிராயத்துக்கிணங்க நேரடி நடவடிக்கை இப்போது எடுப்பதில்லை என்றும், அதற்குப் பூர்வாங்கமாக எல்லாந்தமிழ் இயக்கத்தை இன்று முதல் தொடர்ந்து நடத்துவதெனவும் கட்சியின் பொது நிர்வாக சபை தீர்மானித்துள்ளதுஎன தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் நேற்று வவுனியாவில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் அறிவித்தார்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் எல்லாம தமிழ் இயக்கம் வெற்றிபெற தமிழ் மக்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றும், அரசாங்கத்துடனும், உறவினர், சிநேகிதர்களுடனும் தமிழிலேயே தொடர்புகொள்ளுமாறும் விண்ணப்பித்துக்கொண்டார்.

திரு அமிர்தலிங்கம் பேசுகையில் எல்லாம் தமிழ் இயக்கத்திற்கு அரசாங்கம் எதிர்ப்புக் கொடுக்குமானால், தமிழ் ஆட்சிக்கு அதுவே அத்திவாரம் அமைக்கும் என்று கூறினார்.

---

# "பிரச்னைகளுக்கு தீர்வு காண ஆவன செய்வேன்"

## புதிய செனட்டர் நடேசன் கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ் மக்களின பிரச்னைகளுக்கு விரைவான தீர்வு காண்பதற்கு நான் என்னால் இயன்ற அளவு ஆவன செய்வேன்" என்று முன்னாள் தபால் தகவல் மந்திரியும் புதிய செனட்டராக நியமனம் பெற்றுள்ளவருமான திரு. க. நடேசபிள்ளை 'ஈழநாடு' நிருபரிடம் கூறினார்.

"தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு விரைவாக தீர்வுகான வேண்டுமென்பதில் பிரதமர் நாட்டம் கொண்டுள்ளார் என்பதை இந்த நியமனம் உறுதிப்படுத்துகிறது. இம் முயற்சியில் என்னால் ஆவன செய்வதற்கு இதனால் எனக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது" என்று திரு. நடேசன் மேலும் தெரிவித்தார்.

இந்துசமயம், கல்வி இவற்றின் அபிவிருத்தியில் ஈடுபாடுடைய ஒருவரை செனட்சபைக்கு நியமிப்பது தமது நோக்கமாக இருந்ததென்று பிரதமர் தம்மிடம் தெரிவித்ததாகவும் திரு- நடேசபிள்ளை கூறினார்.

---

# 'ஞானனந்தன் மரணம் எச்சரிக்கையாய் இருக்கட்டும்'

## கடலில் மூழ்கி மாண்ட இளைஞன் பற்றி மரண விசாரணை அதிகாரி

யாழ்ப்பாணம், திங்கள்

"பெற்றோருக்குச் சொல்லாமல் எந்தவிதமான பயமுமின்றி இப்படியான செயல்களில் துணிச்சலுடன் ஈடுபடும் மற்றைய வாலிபர்களுக்கு ஞானனந்தனின் மரணம் ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்".

சீனக்கப்பலொன்றைப் பார்ப்பதற்காக கடலில் நீந்திச் சென்று சுழியில் சிக்கி மரணமான 22 வயதுள்ள டேவிட் மன்னத்தம்பி ஞானந்தனின் மரணம் குறித்து நடைபெற்ற சிரணவிசாரணையில் திடீர்

8-ம் பக்கம் பார்க்க

## காணி எடுத்தற் சட்டம் ( அத்தியாயம் – 460)

### 7-ம் பிரிவின்படியான அறிவித்தல்

கடித இலக்கம்: எல். டி.. 3726

கீழிருக்கும் அட்டவணையில் குறிப்பிட்ட காணியை காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது. முழு விபரங்களையும் 1963-4-5 திகதியில் வெளியாகும் 13,592 இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை (3-ம் பாகம்) யில் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டப் பிரிவு:- மட்டக்களப்பு.
கிராமத்தின் பெயர்:- களிமடு.
பட இலக்கம் :- A. 1377-ம் பிரதம படம்.
துண்டுகள் இலக்கம்:- 12 — 21.
காணியின் பெயர்:- ஆர்த்திவட்டை.

சி. லூடிக்கின்ஸ்,
அரசாங்க அதிபரும்,
காணி எடுத்தல் அதிகாரியும்
மட்டக்களப்பு மாவட்டம்.

---

எனது இல. எல். ஏ 1746

## இலங்கைச் சட்டக் கோவையின் 460-ம் அத்தியாயமான

### காணி கொள்ளும் சட்டத்தின் 7-ம் பிரிவின்கீழ் உள்ள அறிவித்தல்

கீழ் காட்டிய அட்டவணையில் உள்ள காணியை எடுத்தற்கு உத்தேசித்திருக்கிறது. முழு விபரங்களும் 5-4-63 திகதியின் இலக்கம் 13, 592 கொண்ட அரசாங்க கசற் பத்திரிகை பாகம் III பார்க்கவும்.

அட்டவணை

கிராமத்தின் பெயர்:- ஹல்தன்துவான
பிரிவுக் காரியாதிகாரியின் பகுதி:- பிற்றிக்கால் கோறளை தெற்கு.
காணியின் பெயர்:- போபனுவவத்தை, அர்ச் பேர்னுட் தோட்டம்.
லொட்:- 1-ம் 2-ம் பீ. பீ. ஏ. 1766.

ஒப்பம் / பீ. ஜீ. புஞ்சிகேவா,
அரசாங்க உதவி அதிபர்,
புத்தளம் டிஸ்திறிக்.

---

3 வருஷ டிப்பசிட் வட்டி

# 8%

சிலோன் றிசேவ் லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

---

வரி விளம்பரம்

### அறிவித்தல்

உடுவில் ஸ்ரீ சித்திவிநயகர் ஆலயத்துக்கு வடக்கு பக்கமாக உள்ள காணியில் கொட்டையடி என்னும் தோப்பு பெயரில் உள்ள காணியில் சி. ஆறுமுகத்துக்கும் பெண் மாரிமுத்துவுக்கும் ஒரு பரப்பு உறுதிதான் உள்ளது. அதன்படி ஒரு பரப்பு மாத்திரமே செல்லும். இவர்கள் இருபேரும் தங்கள் பேரப்பிள்ளைக்கு உறுதியின்படி ஒரு பரப்பும் தங்கள் ஆட்சி உரிமையில் உள்ளது என்று பத்து குளியும் எழுதியிருப்பதாக அறிந்தேன். பத்துக்குளி செல்லாது. ஒரு பரப்பு மாத்திரமே அளக்கலாம் அளக்கும் பொழுது கீழ்க்காணும் விலாசகாரனுக்கு அறிவிக்காமல் அளக்கப்படாது.

எஸ். ஏ. நவரெட்ணம், உடுவில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய சொந்தக்காரரும், மனேஜரும் 83/9, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
865

---

### காணி விற்பனைக்கு

வவுனியா மாவட்டத்தில் மரங்குளம் பிரிவில், ஊஞ்சால் கட்டி குளத்தின் கீழ் 10 ஏக்கர் திறம் வயல் விற்பனைக்கு இருக்கிறது. நேரில் தொடர்பு கொள்ளவும். 83/1, B. A. தம்பி லேன், வெல்லவத்தை.
860

---

புதுவருடத்துக்கு முன்

# 4,000 தொன் சீனி இலங்கைக்கு இந்தியா அனுப்புகிறது

கொழும்பு, ஞாயிறு

இலங்கையின் பலபகுதிகளிலும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சீனித் தட்டுப்பாட்டை சிறிது நிவர்த்தி செய்யும் பொருட்டு இலங்கைக்கு 4,000 தொன் சீனி அனுப்ப இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சீனி சிங்கள-தமிழ் புதுவருடத்துக்கு முன்னர் இலங்கை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கள-தமிழ் புதுவருடத்துக்கு முன்னர், அதாவது இம்மாத நடுப்பகுதியில் இலங்கை வரவிருக்கும் இந்தியச் சீனியை இலங்கை அரசாங்கம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளும். சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சீனி இறக்குமதி செய்யப்படுகிறது.

### கட்டுப்பாட்டு விலைக்கு சீனி இல்லை ?

இலங்கையின் பல பகுதிகளிலும் இப்பொழுது சீனித் தட்டுப்பாடு நிலவிவருவதாகத் தெரியவருகிறது. சில இடங்களில் சீனியின் விலை அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. சில இடங்களில் பாவனையாளர்கள் தங்களுக்குத் தேவையான சீனியைக் கடையில் வாங்க முடியாமல் இருக்கிறது? கட்டுப்பாட்டு விலைக்குச் சீனி கிடைப்பது மிகவும் அரிதாகவிருப்பதாக பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### தேநீரின் விலை ஏற்றம்

சீனித் தட்டுப்பாட்டினால் தேநீரின் விலை அதிகரித்துள்ளது. சில தேநீர்க்கடைகளில் ஒரு கோப்பை தேநீர் ஆறு சதம் முதல் ஏழுசதம்வரை விற்பனை செய்யப்படுகிறது.

### அனுராதபுரத்தில்....

சீனித் தட்டுப்பாட்டினால் அனுராதபுரத்தில் சிலகடைகளிலும், வீடுகளிலும் தேநீர் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. சில வீடுகளில் தேநீருக்குப் பதிலாக தண்ணீர் கொடுக்கப்படுகிறது! வேறு சில வீடுகளில் சீனிக்குப் பதிலாக சர்க்கரையும் பேரீச்சம்பளமும் உபயோகிக்கப்படுகிறது!

### கள்ளமார்க்கட்டில் சீனி

நாட்டில் சீனித்தட்டுப்பாடு நிலவிவரும் இச்சமயத்தில், போதியளவு சீனியை கள்ள மார்க்கெட்டில் வாங்க முடிகிறதென்றும் கள்ளமார்க்கெட்டில் ருத்தல் சீனி எண்பது சதம் முதல் ஒரு ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் தெரியவருகிறது.

### இந்தியஹைகமிஷனுக்கு வேண்டுகோள்

இலங்கையில் நிலவிவரும் சீனித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு இலங்கைக்கு சீனியனுப்பி உதவுமாறு இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனரிடம் வர்த்தக அமைச்சு அதிகாரிகள் கேட்டிருந்தனர். இலங்கையில் இப்பொழுது சீனித்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறதென்றும் சிங்கள-தமிழ் புதுவருடம் சமீபத்தில் வருவதால் சீனி அவசரமாகத் தேவைப்படுகிறதென்றும் அவர்கள் கேட்டிருந்தனர். இந்த வேண்டுகோளுக்கிணங்கவே இலங்கைக்கு சீனி விநியோகம் செய்ய இந்தியா இணக்கம் தெரிவித்தது.

---

## அரபுக் கூட்டரசு

கெய்ரோ, ஏப்.7

ஐக்கிய அரபுக குடியரசு, ஈராக், சிரியா ஆகிய நாடுகளைக்கொண்ட கூட்டரசு அமைக்கும் யோசனை பற்றி கெய்ரோவில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவிருக்கின்றன. இபபேச்சுவார்த்தைகளில் சிரியா, ஈராக் பிரதம மந்திரிகளும் கலந்து கொள்வார்கள்.

---

### இந்திய வர்த்தகக் கோஷ்டி

இலங்கைக்கு விஜயம்செய்த இந்திய வர்த்தக தூதுகோஷ்டியின் தலைவரும் இந்திய வர்த்தக, தொழில் உதவி அமைச்சின் உதவிக் காரியதரிசியுமான திரு. எஸ். ஹமீத் இதுசம்பந்தமாக நிருபர்கள் மத்தியில் பேசுகையில், வேறு சிலநாடுகளுடன் இந்தியா சீனி ஏற்றுமதித் தொடர்பு வைத்துள்ளதென்றும் இந்தச் சமயத்தில் இலங்கைக்குச் சீனி அனுப்புவது சிறிது கஷ்டமாகவிருந்தாலும் இலங்கையின் அவசர வேண்டுகோளை இந்தியா புறக்கணிக்காதென்றும் சிங்கள-தமிழ் புதுவருடத்துக்கு முன்னர் இந்தியச் சீனி இலங்கைக்குக் கிடைக்கும் ... றினர்.

---

## குற்றச்சாட்டுக்கு மறுப்பு

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க பார்லிமெண்டரி குழுக் கூட்டங்களில், அங்கத்தவர்களிடையே கட்டுப்பாடு இருப்பதில்லையென்றும் அவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொள்கிறார்களென்றும் உப-சபாநாயகர் திரு. ஹியுஜ் பெர்ணண்டோ கூறும் குற்றச்சாட்டை அரசாங்க பிரதம கொறடா திரு. ஜே. டி. வீரசேகரா மறுத்துள்ளார்.


இதுசம்பந்தமக திரு. ஹியுஜ் பெர்ணண்டோவுக்கு திரு. வீரசேகரா அண்மையில் எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "பத்திரிகைகளில் படித்த பின்புதான் உங்களின் கடிதம் எனக்குக் கிடைத்தது. அரசாங்க பார்லிமெண்டரி குழுக் கூட்டங்களில், அங்கத்தவர்கள் ஒழுங்கீனமாக, கட்டுப்பாடின்றி நடந்துகொள்வதாக குற்றம் சாட்டியிருந்தீர்கள். இது உண்மையல்ல. எந்தக் கூட்டத்திலும் நீங்கள் கூறும் சம்பவம் நிகழவில்லை."

---

வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

---

# இவ்விளக்குகளில், எந்த விளக்கிற்கு நீங்கள் உங்களை ஒப்பிடுவீர்கள்?



முதல் விளக்கில் நிறைய எண்ணெய் இருப்பதனால் அது நன்றாக எரிகிறது. இரண்டாவது விளக்கில் எண்ணெய் குறைவாக இருப்பதனால் குன்றி எரிகிறது. மூன்றாவது விளக்கில் எண்ணெய் இல்லாமற் போனதினால் தன் திரியையே எரித்துக்கொண்டிருக்கிறது.

உடம்பிலும் அதே விதத்தில், ப்ரோட்டின் எரிந்து, உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்பு பொருள்களை உருவாக்கி, பழுதான உயிரணுக்களை சரிப்படுத்துகிறது. தினமும் வேண்டிய அளவு ப்ரோட்டினை உட்கொண்டால் பூரண சுகத்துடன் முதல் விளக்கை போல் ஒளிவீசி திகழுவீர்கள். தேவைக்கு குறைவாக ப்ரோட்டின் உட்கொண்டால் குன்றி எரிவீர்கள். ப்ரோட்டின் உட்கொள்ளாமலேயிருந்தால் நீங்கள் மூன்றாவது விளக்கைப்போல் உங்களையே எரித்துக்கொள்வீர்கள்.




ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன், தூய்மையான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டின்னை, எளிதாக ஜீரணிக்க கூடிய முறையில் கொண்டது. அனுதினமும் ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கனை விருப்பமானால் சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் கூட வைத்தியர்கள் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சிபார்சு செய்கிறார்கள்.

அனுதினமும் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.




# ப்ராண்ட்ஸ்

## எஸன்ஸ் ஒப் சிக்கன்

---

### தேவை

ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்கள எஸ். எஸ். ஸி. தராதரத்துடன் செல்வாக்கும், நேர்மையும் நிறைந்தவர்கள், வெளிவேலைப் பிரதிநிதி, அபிவிருத்தியாளர் பதவிகட்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பம் 17-4-63-க்குப் பின் ஏற்கப்படமாட்டாது.

மனுப்பண்ணுக:-

மனேஜர், தபினன்ஸ் அன் கிறன்ரி கொம்பனி லிமிடெட், மாவிட்டபுரம், தெல்லிப்பளை.
864

---

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர்
கைலாயபிள்ளையார் கோவலடி, யாழ்ப்பாணம்.

# 'சமரச உடன்பாடு இல்லையேல் படைபலத்தால் சீனரை வெளியேற்றுவோம்'

## காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மொரார்ஜி

### எல்லாவித தியாகத்துக்கும் தயாராக மக்களுக்கு வேண்டுகோள்

புதுடில்லி, ஏப். 7

சீன ஆக்கிரமிப்பினால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்கு மக்கள் எல்லாவிதமான தியாகங்களைச் செய்யவும் தயாராக இருக்கவேண்டும் என்ற தீர்மானம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஏகமனதாக நிறைவேறியது. காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நேற்று புதுடில்லியில் காங்கிரஸ் அக்ராசனர் சஞ்சீவையா தலைமையில் நடைபெற்றது. கொழும்பு யோசனைகளை இந்தியா அப்படியே முழுமையாக ஏற்றுக்கொண்ட போதிலும் சீனர்கள் அதைத் தட்டிக் கழித்து அந்த யோசனைகளுக்கு முற்றிலும் விரோதமான தமது சொந்தக் கருத்தை வலியுறுத்திவருவதுடன் எல்லை நெடுகிலும் துருப்புக்களைக் குவித்துவருகிறார்களென்றும் இந்நிலையில் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த மக்கள் எல்லாவித கஷ்டங்களையும் ஏற்றுத் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டுமென்றும் அந்தத் தீர்மானம் கூறுகிறது.

காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுகையில், இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கை நாட்டின் பாதுகாப்பு முயற்சிகளைத் தளர்த்துவதாகாது என்றும் கஷ்டங்களிலிருந்து வந்தபோதிலும் இந்தியா முன்னேற்றமடைந்து வந்துள்ளதென்றும் கூறினார்.

"நடுநிலைமைக் கொள்கையைக் கைவிட்டு ஏதாவது ஒரு மண்டலத்துடன் சார்பு கொண்டால் நாம் நமது சுதந்திர உரிமையை இழந்துவிடுவதுடன் நமது பொறுப்பையும் மற்றவர்களிடம் எதிர்பார்த்துக்கொண்டிருக்க நேரும்" என்று நேரு கூறினார்.

தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்துக்கும் பதிலளித்து நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் பேசுகையில், தனது சுதந்திர ஆட்சி உரிமைபற்றி இந்தியா சமரசம் பேசமாட்டாது என்றார்.

இந்தியாவின் சோஷலிஸம் மெதுவானதாக இருப்பினும் உறுதியானது, பலமானது, நிச்சயமானது என்று மொரார்ஜி கூறினார். நடுநிலைமைக் கொள்கையும் சோஷலிஸமும் இந்தியாவில் வெற்றி பெற்றுள்ளது என்று நிதிமந்திரி தெரிவித்தார்.

"சமரச உடன்பாட்டுக்கு வருவதற்கு சீனா தவறினால் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து படைபலத்தினால் சீனரை வெளியேற்றுவோம்" என்று மொரார்ஜி தேசாய் கூறினார்.

## இந்தியச் செய்திகள்

### மவுண்ட்பேட்டன் டில்லி வருவார்

புதுடில்லி, ஏப். 7

கராச்சியில் நடைபெறவிருக்கும் மத்திய ஒப்பந்த ஸ்தாபன கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு இம்மாதம் 30-ம் திகதி மவுண்ட்பேட்டன் பிரபு புதுடில்லி வருவார். புதுடில்லியில் அவர் மூன்று நாட்கள் தங்கியிருப்பார்.

### மின்சார விநியோக சட்டம்

புதுடில்லி ஏப். 7

மத்திய மின்சார அமைப்பை இன்னும் பயனுள்ள வகையில் செயல்படச் செய்யும் பொருட்டு, 1948-ம் வருடத்திய மின்சார (விநியோக) சட்டம் விரைவில் திருத்தப்படவிருக்கிறது.

### சுப்பிரமணியம் ஜெர்மனி செல்வார்

புதுடில்லி, ஏப். 7

யூனியன் கனரக தொழில் மந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம் இம்மாதம் 10-ம் திகதி மேற்கு ஜெர்மனிக்கு செல்வார். அங்கு அவர் ஒரு வார காலம் தங்கியிருப்பார். ரூர்க்கேலா உருக்காலை அபிவிருத்திக்காக மே. ஜெர்மனி 45 கோடி மார்க்குகள் வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக திரு. சுப்பிரமணியம் செல்கிறார்.

### சிக்கிம் மகாராஜா தம்பதிகள்

கல்கத்தா, ஏப். 7

சிக்கிம் மகாராஜா குமாரும், அவருடைய அமெரிக்க மனைவியும் விமான மார்க்கமாக கண்டோக்குக்குப் புறப்பட்டார்கள். சென்ற சனிக்கிழமை இவர்கள் நியுயோர்க் சென்றார்கள்.

### 'ஆட்சிமொழி மசோதா'

சென்னை, ஏப். 7

ஆட்சிமொழி மசோவில் ஆங்கிலத்துக்கு எந்தநிலை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை தம்மால் ஊகிக்கமுடியவில்லை என்றும், வசதியைவிட குழப்பமே ஏற்படுமென்றுதாம் கருதுவதாகவும், 1947-ம் ஆண்டில் இருந்ததைப் போலவே எல்லா மத்திய அரசாங்க விவகாரங்களிலும், ராஜ்யங்களுக்கு இடையேயான விவகாரங்களிலும் அரசாங்க வேலையை நீடிக்கச்செய்து, அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து மொழி அத்தியாயம் முழுவதையும் நீக்கிவிடவேண்டும் என்று திரு. ராஜாஜி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### 'தமிழர் தெலுங்கு படிக்கவேண்டும்'

சென்னை, ஏப். 7

தற்போதைய அரசியல் அமைப்பைக் கருதி, மாணவர்கள் தெலுங்கும் கற்கவேண்டும் என்று திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணுதுரை தெரிவித்துள்ளார். பாடசாலை தினவிழாவொன்றில் திரு. அண்ணுதுரை பேசுகையில் தமிழ்நாட்டுக்கு ஆந்திராவுடன் தொன்றுதொட்டு நெருங்கின தொடர்புகள் தெலுங்குக்கும் உண்டென்றும் ஆகையினால் அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

### ரிப்பன் விற்பனவில் பொற்கொல்லர்

வேலூர், ஏப். 7

வேலையிழந்த பொற்கொல்லர்கள் தம்முடைய பரம்பரைத் தொழிலைவிட்டு, இங்கு 'ரிப்பன்' விற்பனைசெய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். வேலையிழந்த பொற்கொல்லர்களில் சிலர் காய்கறிவிற்றும், சீயாக்காய்தூள் விற்றும், பாக்குச்சீவல் விற்றும் வாழ்க்கையைக் கொண்டுசெல்கிறார்கள்.

## இந்தியாமீது சீனா மீண்டும் தாக்குதல் நடத்துமா?

### பிரிட்டிஷ் பத்திரிகை கருத்து

லண்டன், ஏப்ரல், 5

"இந்தியாமீது இப்போதைக்கு சீனா மீண்டும் தாக்குதல் நடத்தாது" என்று "டெய்லி டெலிகிராப்" என்னும் பிரிட்டிஷ் பத்திரிகையின் டெல்லி நிருபரான அந்தோனிமான் இப்பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் நோக்கங்கள் பற்றியும் அவர் இக்கட்டுரையில் கருத்துக் கூறியுள்ளார். அவர் சொல்லியிருப்பதாவது:- சீனாவின் உள்நாட்டு விவகாரங்கள் பற்றி திட்டவட்டமாகத் தெரியாத காரணத்தால் சீனாவின் உண்மையான நோக்கம் என்ன என்ற கேள்விக்கு ஊகத்தின் அடிப்படையில் தான் பதிலளிக்க முடியும். ஆயினும் சீனாவின் கொள்கை என்னவாக இருக்க முடியும் என்பதை ஓரளவு சொல்ல முடியும். சீனத்துருப்புகள் இந்திய எல்லையில் குவிக்கப்படுவதாக சீனா தாங்களாகவே இதுபற்றிய செய்திகளைக் கிளப்பிவிடலாம். அல்லது ஓரிரு இடங்களில் சீன ராணுவம் ஊடுருவலில் ஈடுபடலாம். இம்மாதிரிச் செய்வதில் சீனாவுக்கு அதிக செலவு எதுவும் ஏற்படாது. எனினும் இம்மாதிரி செயல்களில் ஈடுபடுவதன் மூலம் சீனா இந்தியாவின் ராணுவ பொருளாதார முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடவே முயற்சிக்கும்.

இதே சமயத்தில் சீனா இந்தியாவில் உள்ள நாகர் கலகக்காரர்களுக்கு அதிக உதவி அளிக்க முற்படும். காஷ்மீரை தனிநாடாக ஆக்குவதற்கான முயற்சியிலும் சீனா இறங்கும். பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, பர்மா ஆகிய நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள உறவை சீர்குலைக்க சீனா முயற்சிக்கும். இந்திய அரசாங்கம் தனது நாட்டு மக்களின் சமூக நல அபிவிருத்தியில் கவனம் செலுத்த முடியாதபடி தடுத்து தனது ராணுவ படைகளுக்காகவே தனது நிதி வசதியை செலவிடும் நிலையை ஏற்படுத்துவதே சீனாவின் நோக்கமாகும். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இந்தியாவுக்கு குறைந்துவரும் செல்வாக்கை மேலும் பலவீனமாக்குவதும் சீனாவின் நோக்கமாகும்.

சீனா இப்போது தனது நாட்டின் தென் பகுதியில் தீவிர அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுள்ளது. திபெத்திலிருந்து காட்மண்டுவுக்கு புதிய ரோடு அமைக்க இப்போது சீனா சர்வே வேலை நடத்திவருகிறது. மேற்கே தாஜிகிஸ்தான் எல்லைப்பகுதிலிருந்து மூக்கே விட்நாம் வரை சீனா தனது எல்லை ஓரப்பகுதிகளில் புதிய ரோடுகளையும், விமான தளங்களையும் அமைத்து வருகிறது. அதே சமயத்தில் திபெத்தில் தனது படை பலத்தை அதிகரித்து வருகிறது.

இவ்வாறு அந்தோனிமான் தனது கட்டுரையில் கூறியுள்ளார்.

## குருஷ்சேவுக்கு உட்பகைச் சிக்கல்?

லண்டன், ஏப்ரல் 7

இன்னும் இரண்டு வாரத்தில் குருஷ்சேவ் தனது 69-வது பிறந்த நாளைக் கொண்டாடப்போகிறார். இந்தக் காலகட்டத்தில் அவருக்கு உட்சிக்கல்கள் பல இருப்பதாகப் பரபரப்பூட்டும் பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றை மாஸ்கோ வட்டாரங்கள் வன்மையாக மறுக்கின்றன.

இத்தாலியிலிருந்து வெளியிடப்படும் "யூனிட்டா" என்னும் செய்தி இதழ் மாஸ்கோ செய்திகளை அடிக்கடி வெளியிட்டுவரும் அப்பத்திரிகை "மாஸ்கோவில் மிக இக்கட்டான அரசியல் சூழ்நிலை" இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும் பொருளாதாரத்துறையில் ரஷ்யாவுக்குச் சங்கடமான பெரும் பிரச்னைகளும், தோல்விகளும் ஏற்பட்டுள்ளதாக அது எழுதியிருக்கிறது.

இச்செய்தியினை விரிவுபடுத்தி இத்தாலிய செய்திநிறுவனங்கள் எழுதுகின்றன. மிக்கைல் சூஸ்லேவின் தலைமையிலுள்ள எதிர்க்குழு குருஷ்சேவ் கோஷ்டியை அண்மையில் சிறுபான்மை ஆக்கிவிட்டதாக இத்தாலியச் செய்திநிறுவனங்கள் கூறுகின்றன.

"யூனிடா" செய்தி இதழின் கட்டுரை சோவியத் தலைமையை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை மட்டுமே விமரிசனம் செய்துள்ளது. அக்கட்டுரையை நுணுகிப்பார்த்ததில் குருஷ்சேவின் எதிர்காலம் பற்றி வாதப்பிரதிவாதங்கள் எழுவதற்கு அதில் எவ்விதமான ஆதாரமுமில்லை என்று மாஸ்கோ வட்டாரங்கள் கூறுகின்றன.

## செஸ்டர்பவல்ஸ் புதிய தூதர்

புதுடில்லி, ஏப். 7

இந்தியாவில் திரு. செஸ்டர்பவல்ஸ் புதிய அமெரிக்க ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்பொழுது இந்தியஸ்தானிகராகவுள்ள பேராசிரியர் கல்பிரய்த் ஜூன் மாதத்துடன் ஸ்தானிகர் பதவியிலிருந்து விலகி கிஹோவார்ட் பல்கலைக்கழகத்தில் பதவியேற்கச் செல்கிறார். திரு. பவல்ஸ் 1951-ம் ஆண்டு முதல் 53-ம் ஆண்டுவரை இந்தியாவில் ஸ்தானிகராகப் பணியாற்றியுள்ளார். ஜூன் மாத இறுதியில் அல்லது ஜூலை மாதத் தொடக்கத்தில் அவர் பதவியேற்பார்.

## "இழந்த பிரதேசங்களை இந்தியா மீட்கவேண்டும்"

—ஜெனரல் கரியப்பா

ஹைதராபாத், ஏப். 7

கம்யூனிஸ்ட் சீனா இந்தியா மீது மீண்டும் தாக்குதலை ஆரம்பித்தால் அந்தத் தாக்குதலை முறியடிப்பதற்கு எல்லா நேசநாடுகளிடமிருந்தும் இந்திய அரசாங்கம் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஜெனரல் காரியப்பா தெரிவித்துள்ளார்.

நிருபர்கள் மத்தியில் ஜெனரல் காரியப்பா பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

சீனா நீண்ட காலத்துக்குக் கெடுபிடிப் போர் நடத்தி இந்தியருக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கலாம். இந்தியாவின் பாதுகாப்புச் செலவை அதிகப்படுத்துவதும் அபிவிருத்தித் திட்டங்களைச் சீர்குலைப்பதுவுமே சீனாவின் நோக்கமாகும்.

கம்யூனிஸ் சீனா, யுத்தநிறுத்தம் செய்து கொண்டாலும் இந்தியா தானிழந்த பிரதேசங்களை மீட்டுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இதைச் செய்வதற்கு இரண்டு வழிகள் இருக்கிறது. மக்மோகன் கோட்டுக்கு வாபஸாகுமாறு சீனாவை வற்புறுத்துவது ஒரு வழி. அந்த முயற்சி பலிக்காவிட்டால் போர் நடத்துவது இரண்டாவது வழி.

1600 போர் விமானங்கள் அடங்கிய முன்னணி விமானப் படையுடன் 25 லட்சம் துருப்புகள் அடங்கியுள்ளவாறு ராணுவத்தைப் பெருக்க வேண்டும்.

## விசேஷ கமிஷன்

### லாவோஸ் மந்திரி கொலை விசாரணைசெய்ய

வியன்டைன், ஏப்ரல் 6

லாவோஸ் வெளி விவகார மந்திரி வால்சேனா சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக விசாரணை ஒன்றை நடத்த 8 பேர் கொண்ட விசேஷ கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கமிஷனில் 2 மாஜிஸ்டிரேட்டுகளும் வலதுசாரி இடதுசாரிக்கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தவர்களும் அங்கத்துவம் வகிக்கிறார்கள்.

லாவோஸ் வெளி விவகார மந்திரி சென்ற திங்கட்கிழமை சுட்டுக்கொலை செய்யப்பட்டதும் இது சம்பந்தமாக அவரது வீட்டுக்காவலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டதும் நினைவிருக்கலாம்.

## பாரூக்

### பாடகியை மணப்பார்

ரோம், ஏப். 6

எகிப்தின் முன்னாள் மன்னர் பாரூக் இத்தாலிய அழகியான கிாப்பீஸ் மினுடோலோ என்ற பாடகியை அடுத்த மாதத்தில் மணம்புரிய விருப்பதாகத் தெரிகிறது.

பாரூக் மன்னருக்கு இப்பொழுது வயது 43. பாடகிக்கு வயது 31.

### மணி வாக்கு

மற்றவர்களுடைய கலாசாரத்தைக் குறைவாக மதிக்கவோ, அலட்சியம் செய்யவோ எனது சமயம் கண்டிப்பாகத் தடுக்கின்றது. அதேசமயம் எனது கலாசாரப்படி நான் வாழாவிடில், அது தற்கொலையாகுமென்றும் வலியுறுத்துகின்றது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tami Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 26 உ (8-4-63)

## நல்ல முன்மாதிரி

சென்ற வாரம் உடுப்பிட்டியைச் சேர்ந்த வல்லையிலே டாக்டர் விக்னராஜா ஆரம்பித்து வைத்த பெரிய நெசவாலை பொதுவாக இலங்கை மக்களாலும் சிறப்பாக யாழ்ப்பாண மக்களாலும் மகிழ்ச்சியுடனே வரவேற்கப் படத்தக்கதொன்றாகும். முதல் நாளன்றே பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள புடவைகளும் துவாய்களும் விற்பனையாயிவானம். நாட்டிலே துணி இறக்குமதியைக் கட்டுப்படுத்தித் துணிப்பஞ்சம்ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் இந்த நெசவாலை, நாட்டுக்குப் பல விதங்களிலும் மிக வெற்றிகரமான சேவை செய்ய முடியும்.

வடமாகாணத்திலே முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பெரிய கைத்தொழிற்சாலை இதுவே. டாக்டர் விக்னராஜா கூறியதுபோல் இவ்வித தொழிற்சாலைகள் இங்கு அதிகமாக ஏற்பட நாட்டின்பொருளாதாரம் வளருவதற்கு மிக உதவியாக இருக்கும். இன்று நமது துணித் தேவைகளுக்காக, வெளிநாடுகளையே நாம் நம்பி வாழ வேண்டியுள்ளது. நமது தேவைகளில் ஒருபகுதியும் கூட இங்கு உற்பத்தி செய்யப்படவில்லை. உடைமட்டுமன்றி, உணவு, முதலிய பல்வேறு பொருள்களுக்கும் நாம் பிறநாடுகளின் கைகளையே எதிர்பார்க்க வேண்டிய நிலையிலுள்ளோம். நாட்டின் செலாவணியைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் கடுமையான கட்டுப்பாடுகளைப் போடுவதால், துணி உள்ளிட்டு பல்வகைப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படுவதுடன், விலைவாசிகள் பெரிதும் உயர்ந்து மக்களுக்குக் கஷ்டமேற்படுகின்றது. இங்கு இவ்வித புதிய கைத்தொழில்கள் ஏற்பட்டு உற்பத்தி பெருகுவதாயின் விலைவாசிகள் குறையவும் நாட்டின் செல்வம் பாதுகாக்கப்படுவதுடன் இங்கு வேலையில்லாக் கஷ்டமும்குறையக் கூடும்.

அரசாங்க உத்தியோகத்தை அதிகம் நம்பி, வாழ்வதற்கில்லை. படித்த வாலிபர்களில் பலர் வேலையின்றி இனி என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கின்றனர். இப்போது படித்துவரும் இளைஞர்களுக்கும் வேலை விஷயம் கவலை அளிக்கக் கூடியதாகவுள்ளது. ஆகவே நம்மக்களின் நல்வாழ்வை முன்னிட்டு வர்த்தகம், கைத்தொழில், விவசாயம் இவற்றில்தான் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் வரவர அதிகரித்து வருகின்றது. இதை உணர்ந்து ஏற்கெனவே சிற்சில சிறிய கைத்தொழில்களை சிலர் ஆரம்பித்துள்ளனர். இந்த உற்சாகத்தில் ஒரேவித கைத்தொழிலைப்பலரும் ஆரம்பித்து, இது தற்கொலைப் போட்டியில் முடிந்துவிடாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் இவ்வித புதியகைத்தொழில்கள் வெற்றிபெற வேண்டுமாயின், மேற்குறித்த நெசவாலை நிர்வாகிகளுள் ஒருவரான திரு. கே. கனகரத்தினம் கூறியதுபோல் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். தங்களின் மேலான நன்மையை முன்னிட்டு மக்கள் சற்றே தியாகம் செய்தாவது, நம்நாட்டுச் சரக்குகளையே ஆதரிக்க வேண்டும். மேலும் நெசவாலைக்கு முக்கியமான தேவையான பருத்தி இங்கு உற்பத்தியாகவில்லை. வெளியிடத்திலிருந்தே இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. மூலப் பொருளான பருத்திக்காக பிறர் கையை நம்பி வாழ்வது பத்திரமாகாததுடன், நம் செலாவணியும் நஷ்டமாவதாகும். பருத்தியை இனி இங்கேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் இதில் நல்ல ஆதாயமிருக்குமென்றும் ஆலை நிர்வாகி யோசனை கூறுகின்றார். இதற்குச் செவிசாய்த்து, பருத்தியை இங்கே உற்பத்தி செய்ய முற்படுவது பலவிதங்களிலும் நல்லதாகும். இப்போது இங்கு நல்ல முன்மாதிரியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பெரிய தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்துவதின் மூலம், மற்றும் பல கைத்தொழில்கள் இங்கு பெருகவும் பொருளாதார சுபீட்சம் ஏற்படவும் ஆக்க முறையில் நாம் வழி செய்து கொண்டதாக இருக்கும்.

——

## கல்லூரி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு

### டாக்டர் பி. எஸ். புத்திமதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கல்லூரி விஷயங்களில் எல்லோரும் ஒத்துழைப்பது அவசியம். இவ்வித ஒத்துழைப்புத்தான் கல்லூரியை வளர்க்க உதவுவதாக இருக்கும்"

இவ்வாறு டாக்டர் பி.எஸ். சுப்பிரமணியம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நள-தமயந்தி நாடகத்தின் ஆரம்பத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

கல்லூரியில் மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு நிதி சேகரிப்பதற்காக நேற்று நடைபெற்ற இந்த நாடக ஆரம்பத்தில் டாக்டர் சுப்பிரமணியம் தொடர்ந்து பேசியதாவது: இக்கல்லூரிக்கு ஒரு பெரிய மண்டபம் கட்டுவதற்காகவே இந்த நள—தமயந்தி நாடகம் நடை பெறுவதால், இது மிகவும் முக்கியமானது. இந்தப்பணியை தனிய ஒருவர் மட்டுமன்றி எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால் இலகுவில் முடியும். பெற்றோர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைத்தால் தான், சிறுதுளி பெருவெள்ளம் போன்று, இந்தப் பணி கூடிய சீக்கரம் நிறைவேறும்.

பாடசாலை மாணவிகளுக்காக, வெள்ளிக் கிழமையும், பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் சனிக்கிழமையும், நள தமயந்தி நாடகம் நடை பெற்றது.

## காந்திஜியின் தென்னபிரிக்க வாழ்க்கை

### 20 பாகங்கள் கொண்ட நூலாக வெளிவருகிறது

மகாத்மா காந்தி தென்னபிரிக்காவில் 21 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். அந்தவாழ்க்கையைப்பற்றி ஆராய்ந்துவருவதற்காக இந்திய அரசாங்கத்தால் நிறுவப்பெற்ற ஆராய்ச்சியாளர் குழு தன்னுடைய ஐந்தாண்டுப் பணியை நிறைவுசெய்துள்ளது. மேற்படி காலத்தில் மகாத்மா எழுதியிருந்த ஆயிரக்கணக்கான கடிதங்கள் இன்னும் இதர எழுத்துக்கள் ஆகியவற்றை ஆராய்ச்சிக்குழு தேடி வந்தது.

சேகரித்த கடிதங்களும், விவரங்களும் மகாத்மாவைப் பற்றிய 20 தொகுதி கொண்ட புத்தகமாக அக்குழுவினால் இப்போது தொகுக்கப்பெறுகிறது. இந்தப்பணி பிரதமர் நேருவின் தூண்டுதலினாலும், ஊக்குதலினாலும் நடைபெறுகிறது. 1893 தொடங்கி 1910-ம் ஆண்டு முடிய வரையிலுள்ள நிகழ்ச்சிகள் அடங்கிய விவரங்கள் ஆறு தொகுதிகளாகத் தொகுக்கப்பெற்று முடிவடைந்துள்ளன.

மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கையில் தென்னபிரிக்கா முக்கியமான இடம் பெறுகிறது. இங்கு தான் அவர் சத்தியாக்கிரக இயக்கத்தினை உருவாக்கிச் செயல்படுத்தினர். இங்குதான் சாத்வீகப் போராட்டமும் உருப்பெற்றது. இப்போராட்டங்களில் அவர் பல முறை சிறை சென்றார். இவற்றினால்தான் 1913-ம் ஆண்டில்பெயர் பெற்ற ஸ்மட்ஸ்-காந்தி ஒப்பந்தமும் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் தான் ஒப்பந்தக்கூலிகளை தென்னபிரிக்கா கொண்டுவருவதையும், அங்கிருந்த இந்தியருக்குப்பல சலுகைகளையும் பெற்றுத்தந்தது.

இந்த ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகப் பணியாற்றியவர் "தென்னபிரிக்காவில் இந்தியர்" என்ற அருமையான புத்தகத்தை எழுதியவரான ஜி. எச். கால்பின். மொரார்ஜிதேசாயைத் தலைவராகவும், கே. சுவாமிநாதனை ஆசிரியராகவும் கொண்டுள்ள இந்த ஆராய்ச்சி நூலின் தொகுப்புக் குழுவுடன் தொடர்பு கொண்டு கால்பின் தென்னபிரிக்காவில் ஆராய்ச்சிகளைச் செய்தார்.

இந்த ஆராய்ச்சியின் மூலம் மகாத்மா காந்தியைப் பற்றி இதுவரை வெளிவராத பல நிகழ்ச்சிகள், செய்திகள், பத்திரிகைக் குறிப்புகள் ஆகியன கிடைத்துள்ளன. எந்தப் பெரியாரின் வாழ்க்கை வரலாறும் இவ்வளவு துல்லியமான விவரங்களுடன் இதுவரை தொகுக்கப்பெற்றதில்லை.

## உணவு உற்பத்தியில் இந்தியாவின் வருங்காலம்

புதுடில்லி, ஏப்ரல் 7

உணவு உற்பத்திக்கான அரசாங்கத்தின் திட்டங்களை ஆராய்ந்து, 1975 வாக்கில் இந்திய உணவு உற்பத்தி 13 கோடியே 30 லட்சம்டன் இருக்கும் என்று இங்கு மதிப்பிட்டுள்ளனர்.

உணவு உற்பத்தித் திட்டங்கள், திட்டமிட்ட கதியில் நிறைவேறி வருமானல், 14 கோடிடன் வரை உயருமென்றும், நாட்டின் தேவைக்குப் போக 70 இலட்சம் டன் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் உபரியாக மிஞ்சும் வகையில் இருக்குமென்று மேற்படி ஆராய்வு மூலம் தெரிகிறது.

இந்த மதிப்பீட்டின்படி உற்பத்தி அந்த அளவுக்குப் பெருகுமா, நடக்குமா, ஆகுமா என்னும் கேள்விகள் எழும்புகின்றன. ஏனென்றால் இந்த மதிப்பாராய்வின்படி கடந்த 10 ஆண்டுகாலத்தில் சராசரி 3.5 சதவிகிதமாக இருந்துவரும் உணவு உற்பத்தி 5 சதவிகிதமாக உயருமென்று கருதப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் உணவு உற்பத்தி சுமார் 7 கோடியே 90 லட்சம்டன்னிலேயே நின்றுபோய்விட்டது. ஆனல் சமுதாயநலச் சீர்திருத்தத் திட்டங்களைத் தீவிரப்படுத்துவதின் மூலம், வருகிற ஆண்டுகளில் உற்பத்திப்பெருக்கம் ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

இதுவரையில் பாசன வசதியில் 71 சதவிகிதத்தைப் பயன்படுத்தியாகிவிட்டது. மூன்றும் திட்ட இறுதிக்குள் நாட்டின் 100 க்கு 100 பாசன வசதியையும் நாடு பயன்படுத்தத் தொடங்கிவிடும்.

விவசாயிகளுக்குக் கடன் தருவதென்பது ஒரு முக்கியமான பிரச்னை. ஏனென்றால் இந்திய லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முன்வந்தால்தான் இப்பிரச்னையைச் சமாளிக்கமுடியும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் டாக்டர் ராம் சுபாக் சிங் கருதுகிறர்.

இதுவரை இந்த ஆலோசனையையாரும் கருதிபார்க்கவில்லை. ஆனல் இதுபற்றி இன்னொரு புது ஆலோசனை குறித்து நிதி அமைச்சரகம் ஆராய்ந்துவருகிறது. லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் நிலங்கள், மகசூல் ஆகியவற்றை விவசாயிகளிடம் ஒத்திக்கு வாங்கிக்கொண்டு கடனுதவி தருவது சம்பந்தமான அறிவிப்பு விரைவில் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

——

## சந்திரனுக்கும் அப்பால் சென்றது!

மாஸ்கோ, ஏப். 7

ரஷ்யாவின் 'லூனிக் 4' என்ற செயற்கைக் கிரகம் சந்திரமண்டலத்துக்கு அப்பால் 5300 மைல் உயரே சென்றுள்ளது. இது பூமியை வலம் வந்து கொண்டிருக்கும். சந்திர மண்டலத்தை இது படம் பிடித்து அனுப்புமென்றும் பூமியுடன் வானெலித தொடர்பு வைத்துக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## பிரிட்டனுக்கு பாரத கதர்

புதுடில்லி, ஏப் 6

பிரிட்டனுக்கு 2லட்சம்ரூபாய் பெறுமதியான கதர் துணி பாரதத்திலிருந்து ஏற்றுமதியாகியுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணப்பெரியார் டாக்டர் எஸ். சுப்பிரமணியத்துக்கு சென்ற சனிக்கிழமையன்று அண்ணமலை இசைத் தமிழ் மன்றத்தார் பொன்னடை போர்த்திக் கௌரவித்தது, ஓர் அபூர்வ வைபவமாகும்.

'இல்லையே' என்னத ஓர் இயற்பகை இருந்ததாகப்பெரிய புராணம் பேசுகிறது. டாக்டரின் வள்ளல் தன்மையைப் பற்றிப் பல பல கதைகளையும் கேட்கும்போது, 'இல்லை' என்று சொல்லாமல், வந்தவர்களுக்கெல்லாம் அவர் உதவி அளிப்பதைப் பற்றி அறியும்போது, யாழ்ப்பாணத்திலே இப்பேர்ப்பட்ட ஒரு பெரியவர் இருப்பதுகுறித்து இங்கு யார்தான் பெருமை கொள்ளாமல் இருக்கமுடியும்?

85 வயதுக்கு மேலான இப்பெரியார், பொன்னடை காணிக்கையைப்பெற இசைந்ததுதான் ஆச்சரியம். 'முடியாது' என்று மறுக்காமல் அவர் இதற்கும் இசைந்தது அவரதுபெரியமனதுக்கு அடையாளமாகும்.

* * *

வாழ்க்கையின் இலட்சியமென்ன என்று அவரைக் கேட்டேன். உடன் அவர் தாயுமான சுவாமிகளின் ஒரு பாடலைப்பாடி அதில், இந்தக் கேள்விக்கான பதில் இருப்பதாகச் சொன்னர். அந்தப் பாடலை நீங்களும் படிக்கிறீர்களா?

"தந்தை தாய் தமர் தாரமகவெனும் இவையெலாம், சந்தையிற் கூட்டமிதிலோ, சந்தேகமில்லை மணி மாடமாளிகை மேடை சதுரங்க சேனையுடனே, வந்ததோர் வாழ்வுமோர் இந்திர ஜாலக்கோலம், வஞ்சனை பொருமை லோபம், வைத்த மனமாங்கிருமி சேர்ந்த மலபாண்டமோ வாஞ்சனை இலாத கனவே,எந்தநாளுஞ்சரியெனத் தேர்ந்து தேர்ந்துமே, இரவு பகலில்லா இடத்து, ஏகமாய் நின்ற நின் அருள்வெள்ள மீதிலே, யானென்பதறவு மூழ்கி, சிந்தைதான் தெளியாது சுழலும் வகையென் கொலோ தேடரிய சத்தாகியென்,சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே தேஜோமயானந்தமே" இந்தப் படலைக் கேட்டதும் அவரது உள்ளம் தெரிந்தது.

வயது 86 நடக்கிறது அவருக்கு. இத்தள்ளாத வயதிலும் சுறுசுறுப்பாக வைத்திய சேவைசெய்து வருகின்றாராம். வைத்தியத்தை பணம் சம்பாதிப்பதற்காக இன்றி, பிணி நீக்கும் சேவையாக நடத்துவதே தமது நோக்கமென்றும், தம்மைபபற்றிப் 'புளுக'த் தாம் விரும்பவில்லை என்றும், பாராட்டுரைகளைக் கேட்டு, தனக்கு மண்டைக்கனம் ஏற்பட்டுவடக் கூடாதென்பதே தம் கவலை என்றும் கூட்டத்திலே சற்றும் பெருமையின்றி, மிக அடக்கமாகவும் தெளிவாகவும் பேசினர். கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது.

மற்றச் செல்வந்தர்களுக்கெல்லாம்முன்மாதிரியாக இருக்கும், கொடைவள்ளல் டாகடர் பி. எஸ். நீடுழி வாழ்க!

* * *

மானிப்பாயிலே முன்னேற்றச் சங்கத்தாரின் 16-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு ஓர் இலவச வாசகசாலையை ஆரம்பித்துள்ளனர். பல புதிய தமிழ்ப் புத்தகங்களும் பழைய புத்தகங்களும் உள்ளன. மெம்பர்கள் மட்டுமன்றி எல்லாரும் படித்துப் பயன்பெறும் வகையில் ஒழுங்கு செய்துள்ளது பாராட்டத்தக்கது. அபிவிருத்திக்கு அதிக இடமுண்டு. சமூகத்தில் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களையும் கைதூக்கி விட்டு முன்னுக்குக் கொண்டு வருவது மிக நல்ல சேவையாகும். அன்புப்பணிகள் மூலம் இவ்விதமான சேவைகள் எந்த ஊரில் பெருகுகிறதோ

(5-ம் பக்கம் பார்க்க)

# ‘தேசிய அபிவிருத்திக்கு நிதி இல்லை’

## பிரதமர் விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

**உணவு, உடை, சுகாதாரம் ஆகியவற்றுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் நாட்டின் நிதி செலவிடப்பட்டுவிடப்படுவதால் தேசிய அபிவிருத்திக்குப் பணம் இல்லாதிருக்கிறது என பிரதமர் திருமதி சிறிமா பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்.**

மீரிகம மத்திய பாடசாலையில் நடைபெற்ற விவசாய, கைத்தொழில் சுகாதார பொருட்காட்சியில்உரை நிகழ்த்துகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

வருமானத்தைவிட அதிகமாக அரசாங்கம் இப்பொழுது செலவசெய்கிறது.

### ‘சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லுங்கள்

இந்த நாட்டிலுள்ள இளைஞர்களின் ஆற்றலும் யுவதிகளின் ஆற்றலும் வீணைக்கப்படுவது நாட்டுக்குப் பெரும் நஷ்டமாகும். இவர்கள் தமது சொந்த ஊர்களை விட்டுவிட்டு அரசாங்க உத்தியோகங்களையும் தொழிற்சாலை வேலைகளையும் தேடிவருகிறார்கள். ஆனல் இவர்கள் புதிய பாதையில் செல்லவேண்டும் ‘சொந்த ஊருக்குத் திரும்பிச்சென்று தேசிய நலன் கருதி நிலத்தை அபிவிருத்தி செய்யுங்கள்’ என நான் இவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த நாட்டிலுள்ள இளைஞர்கள் கூட்டுறவு முறையில் நாட்டை வளமாக்க முன்வர வேண்டும். மக்கள் உள்ளூரில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு ஆதரவுகொடுக்க வேண்டும்

நாடு சீர்குலைந்துவருவதற்கு ஒரு காரணம் வெளிநாட்டுப் பொருள்களில் இருக்கும் விருப்பம்தான்.

### இறக்குமதி கட்டுப்படுத்தப்படும்

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஏராளமான சாரங்கள் இங்கு இருக்கின்றன. ஆனல் மக்கள் அவற்றை வாங்குவதில்லை. அரசாங்கம் இந்த நிலையை சீர்ப்படுத்த இப்பொழுது இறக்குமதியைத் தடைசெய்துள்ளது. 1964-ம வருடத்தில் சாரங்கள் இறக்குமதி செய்யப்படுவது பூரணமாகக் கட்டுப்படுத்தப்படும். உள்ளூரில் தயாரிக்கப்படும் சாரங்களுக்கு ஆதாவளிப்பதற்காகவே இவ்வித நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.’

### அபிவிருத்தி

மிரிகம எம். பீ. திரு. விஜயபாகு விஜயசிங்கா தெரிவித்துள்ளதாவது:-

சமூகசேவைகளுக்கும் அபிவிருத்திக்கும் பணம் தேடுவது நிதிமந்திரியின் பெரும் தலைவிடியாகவிருக்கிறது.

உணவுமானயத்திற்கு செலவிடும் பணம் மட்டும் அபிவிருத்தித்துறைக்குச் செலவிடப்பட்டால் பத்தாயிரம் பேருக்கு இன்று வேலைகிடைக்கும். எந்த அரசாங்கமும் இந்த ரீதியில் இயங்கிக்கொண்டிருக்க முடியாது இவ்விதமே நாம் செயல் பட்டுக்கொண்டிருந்தால் எதிர்கால சந்ததி மிகவும் கஷ்டமடையும்.

தியாகத்தின் மூலம்தான் நமது நாடு முன்னேற்றமடையும். தியாகம் செய்ய மக்கள் பழகிக்கொள்ளவேண்டும்.

எப்பொழுதாவது பங்கீட்டு அரிசியைக் குறைக்கவோ விலையை அதிகரிக்கவோ அரசாங்கம் முடிவுசெய்தால் எதிர்க்கட்சியினர் புரட்சியை உண்டுபண்ணிவிடுகிறார்கள். எனினும் இதுவிஷயமாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் இப்பொழுது ஆலோசனை செய்துவருகிறது.

## ஆனந்தனுக்கு பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

“இளம்பிராயத்திலே மிகப்பெரிய சாதனையை உலகுக்கு எடுத்துக்காட்டிய ஆனந்தனுக்கு நாம் இன்று ஆனந்தக் கண்ணீர் சொரிய வேண்டும். ஏனெனில் அவரின் அபாரமான வெற்றி நமது இளம் வாலிபர்களுக்குப் புத்துணர்ச்சியையும் வேகத்தையும் தந்துள்ளது.”

இவ்வாறு நெல்லியடி மத்திய மஹாவித்தியாலத்தில் ஆனந்தனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய கல்லூரி அதிபர் திரு. எஸ். இரத்தின சபாபதி கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

ஆனந்தனைப் போன்ற அயராத உழைப்பும், அதிசயத் துணிச்சலும் எதற்கும் சளைக்காத வன்மையும், கொண்ட இளைஞர்களாற்றான் நாம் இப்போது விழுந்துள்ள துன்பக்கடலிலிருந்து விடுதலைக் கரையை எட்டிப்பிடிக்க முடியும்.

செல்வி அன்னபூரணம் கணபதிப்பிள்ளை, தமிழ் விரிவுரையாளர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோரும் இன்னும் பல மாணவர்களும் ஆனந்தனின் திறமையைப் பாராட்டிப் பேசினர்கள்.

விஞ்ஞான கழகத்தின் சார்பில் ஆனந்தனுக்கு மலர் மாலை சூட்டப்பட்டது.

மேற்படி கல்லூரி அதிபர் ஆனந்தனுக்கு பென்னடை போர்த்திக் கௌரவித்தார்.

ஆனந்தன் நன்றி தெரிவித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர். “மனிதனகப் பிறந்தவன் புகழ் எடுக்கவேண்டும் இல்லையேல் செத்துமடிய வேண்டும். மனிதன் செய்ய முடியாத காரியங்கள் உலகில் இல்லை. விஞ்ஞான உலகில் சஞ்சரிக்கும் நாம் எதையும் செய்யமுடியும். ஆனல் எதைச் செய்யினும் மனத்தில் திடகாத்திரம் வேண்டும். மனதில் உறுதியிருந்தால் சாதனைகள் பல மனிதனல் நிலைநாட்ட முடியும்.

## மாவிட்டபுரத்தில்

மாவிட்டபுரம், ஞாயிறு

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் வீரர் ஆனந்தனுக்கு மாவிட்டபுரம் முத்தமிழ் கலை மன்றம் வரவேற்புபசார விழா நடத்தியது. காங்கேசன் சிமிந்தித் தொழிற்சாலை வாசலிலிருந்து ஆனந்தன் மங்கல வாத்தியத்துடன் ஊர்வலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில் அமைக்கப்பட்ட மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

இளைப்பாறிய மணியகாரர் திரு. நா. வேலுப்பிள்ளை தலைமையில் இப்பாரட்டு வைபவம் நடைபெற்றது. மன்றத்தலைவர் திரு. சு. து. சண்முகநாதக் குருக்கள் திரு. செ. கதிரேசர் பிள்ளை, வித்துவான் ப. சுப்பையா உட்படப் பலர் ஆனந்தனுக்குப் பாராட்டுரை வழங்கினர். ஆனந்தன் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்தார். திரு. வ. வயிரவப்பிள்ளை நன்றி கூறினர். ஆனந்தனுக்கு கிண்ணமொன்று பரிசாக வழங்கப்பட்டது.

## பலாலியில் வரவேற்பு

பலாலி, ஞாயிறு

வசாவிளான் கிராம முன்னேற்றச்சங்கம் பலாலி தெற்கு வாலிபர் சங்க சனசமூக நிலையம் என்பன நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு வரவேற்பளித்தன பலர் பாரட்டுரை வழங்கினர்.

## போலியோ தடுப்பு இயக்கம்

கொழும்பு, ஞாயிறு

போலியோ என்ற இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு மருந்து குழந்தைகளுக்கு விரைவில் கொடுக்கப்படாவிட்டால் போலியோ நோய் எந்த நேரத்திலும் பரவலாம் என்று பாடசாலை செல்லும் குழந்தைகளின் பெற்றோர் கல்வி, சுகாதார அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

போலியோ தடுப்பு இயக்கம், பாடசாலை விடுமுறை நாட்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்படுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் இந்த இயக்கம் ஈஸ்டர் விடுமுறைக்குப் பின்னர் தான் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று கல்வி இலாகா, சுகாதார அதிகாரிகளுக்குத் தேரிவித்த... இதைத தொடர்ந்து தான் பாடசாலை செல்லும் குழந்தைகளின் பெற்றோர் கல்வி, சுகாதார அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

## பெற்றோர்-ஆசிரியர் சங்கம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் செல்வி. ஆர். எம். சின்னையா தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: செல்வி ஆர். எம். சின்னையா, உப-தலைவர்: திரு கே. ஜெயக்கொடி, செயலாளர்: திரு கே. இரத்தினசிங்கம், உப-செயலாளர்: திருமதி ஏபிரகாம், தனதிகாரி திருமதி அரியநாயகம்.

## கீதைப் பிரசங்கம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை சிவானந்த கலாநிலையத்தில் பேராசிரியர் திரு. எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரிகள் செய்து வரும் பகவத் கீதை பிரசங்கங்களின் சமாவர்த்தன விழா நாளை திங்கட்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

கடந்த மாதம் 4-ம் திகதி தொடங்கி துரைசாமி சாஸ்திரிகள் பகவத் கீதை பிரசங்கங்கள் நடத்திவருகின்றார்.

## ஐயாறன்

(4-ம்பக்கத்தொடர்ச்சி)

அந்த ஊரும் மக்களும் சுபீட்சமாக இருக்கும் அதுவே உண்மையான முன்னேறறமுமாகுமல்லவா?

* * *

தேர்த் திருவிழா இப்போது இங்கு பல கோவில்களிலும் குதூகலமாக நடைபெறுகிறது. பழங்கள், பிரசாதங்கள் பலருக்கும் இலவசமாக வாரி வழங்கப்பட்டன. நவநாகரிகம் எவ்வளவு வளர்ந்தாலும், இந்தப்பழைய பண்பாட்டை சமூகம் மறவாது பின்பற்றுவது மிக மகிழ்ச்சி அளித்தது. ஓடும் தேரை சிரங்குவித்து வணங்கி தரிசனம் செய்த ஏராளமான மக்களும் எவ்வளவு ஆறுதல் பெற்றனர்! இந்த ஆறுதலுக்கு விலை மதிப்புண்டா? வேறு எங்குதான் இதைப் பெற முடியும்?

* * *

மனத்துள் மாயனை மாசறு
சோதியைப்
புனிற்றுப்பிள்ளை வெள்ளைம்
மதிசூடியை
எனக்கு ந்தயைஎம்மானிடை
மருதனை
நினைத்திட்டூறி நின்றந்த
தென் உள்ளமே.

— திருநாவுக்கரசர்

# ஆஸ்பத்திரிகளில் மருந்து தட்டுப்பாடு

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு ஆஸ்பத்திரியிலுள்ள வெளிநோயாளர் சிகிச்சை நிலையங்களில் கடந்த சில நாட்களாக மருந்து தட்டுப்பாடு நிலவிவருகிறது. போதிய மருந்துகளும் கலவைகளும் இல்லாததால், நோயாளர்களுக்குரிய மருந்தை கொடுக்க முடியாத நிலமை இந்த சிகிச்சை நிலையங்களுக்கு ஏற்பட்டுள்ளது

கலவை மருந்துக்குததேவையானவற்ற (மருந்துகளை) இந்த ஆஸ்பத்திரிகள், சிவில் வைத்திய ஸ்டோரிடம் கேட்டால் அங்களிடமும் மருந்து கைவசமில்லையென்று அவர்கள் கூறிவிடுகினறனர். இதன் காரணமாக நோயாளருக்குரிய கலவையை தயாரித்துக் கொடுக்க இந்த ஆஸ்பத்திரிகளுக்கு முடியவில்லை.

ஆஸ்பத்திரிகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதால், பொரும்பாலான நோயாளர்கள் தங்களுக்குரிய மருந்தைப் பெறுமலே செல்கின்றனர். சிலருக்கு அரைவாசி மருந்து கிடைக்கிறது. மிகுதியான மருந்தை பின்னர் வந்து வாங்கும்படி கேட்கப்படுகின்றனர்.

கொழும்பிலுள்ள ஆஸ்பத்திரிகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதால் மருந்துகள் மீண்டும் ஆஸ்பத்திரிக்குக் கிடைக்கும்வரை ஆஸ்பத்திரியில் அனுமதியாவதில்லை யென்றும், தனிப்பட்ட வைத்தியர்களிடம் வைத்தியம் செய்வதென்றும் நேற்று ஆஸ்பத்திரிக்கு வந்த சில நோயாளர்கள் முடிவு செய்தனர்.

இது சம்பந்தமாக சுகாதார பகுதியைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில் மருந்து தட்டுப்பாடு ஏற்படுவது சகஜமாகி விட்டதென்றும் ஆஸ்பத்திரி அதிகாரிகள் நேர்மையான முறையில் வேலை செய்தால், இப்படியான சம்பவங்கள் நிகழாது என்றும் கூறினர்.

## குடிசன மதிப்பீடு அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

1953-ம் ஆண்டில் இலங்கையின் ஜனத்தொகை 8,097,895 ஆக இருந்ததென்று குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபர இலாகாவின் 1961-ம் ஆண்டிற்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது இவர்களுள் 34,69 500 பேர் கண்டியரல்லாத சிங்களவர்களும், 21,47200 பேர் கண்டிச் சிங்களவர்களும் 8,847 00 பேர் இலங்கைத் தமிழரும் 974100 பேர் இந்தியத் தமிழரும், 464000 பேர இலங்கை முஸ்லிம்களும், அடங்கயிருக்கிறார்களென்றும் 1953-ம் ஆண்டில் 800 வேடர்களும் லங்கையில் இருப்பதாக இவ்வறிக்கை தெரிவித்துள்ளது. இலங்கையில் 1953-ம் ஆண்டின் ஜனத்தொகையில் 4,268, 730 ஆண்களும், 3, 829, 165 பெண்களும் அடங்கியிருப்பதாக அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

மாகாண ரீதியிலான சனத்தொகை மதிப்பீட்டின்படி கொழும்பு முதலாவது இடத்தையும் (1,708, 726), யாழ்ப்பாணம் 9 வது இடத்தையும் (491, 849), மன்னர் பத்தவது இடத்தையும் (43,689) வவனியா பதினொராவது இடத்தையும் (35,112), மட்டக்களப்பு பன்னிரண்டாவது இடத்தையும் (270, 493) திருக்கோணமலை 13 வது இடத்தையும் (83,917) வகிக்கின்றன இறுதி ஸ்தானத்தையும் இருபதாவது இடத்தையும் வகிக்கும் கேகாலையில் சனத்தொகை 471, 605 ஆகும்.

### மத அடிப்படையில்

1953-ம் ஆண்டு எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி இலங்கையில் 5209400 பௌத்தர்களும், 1610500 இந்துக்களும், 541500 முஸ்லிம்களும், 724400 கிறிஸ்தவர்களும், 1,900 பிற மதத்தவர்களும் இருப்பதாக அறிக்கை தெரிவிக்கின்றது.

## ஒலி பெருக்கி அனுமதி இல்லை!

யாழ்ப்பாணம், திங்கள்

‘எல்லாம் தமிழ் இயக்க வாரம்’ சம்பந்தமாக இன்று தொடக்கம் யாழ்ப்பாணப்பகுதியில் இம்மாதம் 15-ந் திகதி வரை நடைபெறவிருக்கும் பிரசாரக் கூட்டங்களுக்கு ஒலி பெருக்கி உபயோகிப்பதற்கு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் தமிழரசுக் கட்சியினர் அனுமதி கோரியிருந்தனர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் எனத் தனித்தனியாக அனுமதி கோராமல் எல்லாக் கூட்டங்களுக்குமென பொதுவாக அனுமதி கோரினர் என்று தெரிகிறது யாழ்ப்பாணம் பொலிஸார் அனுமதி கொடுக்கவில்லை யென்றும் கொழும்பிலிருந்து அனுமதிபெற வேண்டுமென்று பொலிஸார் தெரிவித்து விட்டனரென்றும் அறியப்படுகிறது.

## பெற்றோர்-ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு ஸ்ரீ கணேசவித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்க விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது. காலையில் விளையாட்டுப்போட்டியும் மாலையில் பொதுக்கூட்டமும் நடைபெறவிருக்கிறது.

வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் மாலையில் நடைபெறும் கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார்.

## 158 வயதுள்ள விவசாயி

மாஸ்கோ, ஏப். 7

158 வயதுள்ள ஷிராலி மஸ்லிமோவ் என்ற ஒரு விவசாயி இன்னும் உயிருடன் வாழ்ந்து வருகிறார் என்றும் இதுவரை நோய் என்றும் அணுகியதில்லையென்றும் எப்பொழுதும் சுறுசுறுப்பாக வேலை செய்கிறார் என்றும் சோவியத் செய்தி ஸ்தாபனமான ‘டாஸ்’ அறிவித்துள்ளது.

## விசேஷ பஸ் சேவைகள்

கொழும்பு, ஞாயிறு

சிங்கள - தமிழ் புதுவருடத்தின்போது விசேஷ பஸ்சேவைகளை நடாத்த இலங்கை போக்குவரத்து சபை முடிவு செய்திருக்கிறது. இம் மாதம் ஆரும்திகதி முதல் இருபதாம் திகதிவரை விசேஷ போக்குவரத்துச் சேவைகளை இ.போ.சபை நடத்தும்.

இம் மாதம் 10-ம் திகதி முதல் 13-ம் திகதி வரை காலை ஆறுமணி முதல் இரவு 10 மணி வரை, கொழும்பிலிருந்து கண்டி, காலி, குருநாக்கலை ஆகிய இடங்களுக்கு ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் பின்னர் பஸ்சேவை நடைபெறும்.

# 'பாரபட்சம் எதுவும் காட்டப்படவில்லை'

## யாழ். மேயரின் அறிக்கைக்கு மந்திரி பதில்

கொழும்பு, ஞாயிறு

**மேயர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்த டாக்டர் தர்மலிங்கம் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டவைகள் பற்றி ஸ்தலஸ்தாபன அமைச்சு பதிலளித்துள்ளது**

'யாழ்ப்பாண மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஸ்தலஸ்தாபன அமைச்சு பாரபட்சமாக நடந்துகொண்டுள்ளது என்றும் 1960-ம் வருடத்தில் மாநகரசபைத் தேர்தலில் தோல்வியுற்ற எம். பி. ஒருவருக்கு உதவும் நோக்கத்துடன் நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டில் மாநகரசபை விஷயங்கள் பற்றி விசாரணை நடத்த ஒரு சிரேஷ்ட அதிகாரி ஒருவர் அனுப்பப்பட்டாரென்றும் அவர் நடுநிலைமை வகித்து விசாரணை நடத்தியதால் மாநகரசபையைக் கலைத்து குறிப்பிட்ட எம். பிக்கு உதவ முயன்ற மந்திரியின் எண்ணம் ஈடேறுதுபோயிற்று என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காக ஸ்தலஸ்தாபன மந்திரி இவற்றைக் குறிப்பிட விரும்புகிறார்.

நகரசுத்தி தொழிலாளர், மலசுத்தி தொழிலாளர் ஆகியோரின் வேலைநிறுத்தம் பல நாட்களாகத் தீர்க்கப்படாததைத் தொடர்ந்து பொதுமக்கள் கௌரவ மந்திரிக்கு இந்த வேலைநிறுத்த விவகாரத்தை விரைவில் தீர்த்து வைக்குமாறு கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்கி ஸ்தலஸ்தாபன சிரேஷ்ட உதவிக் கமிஷனர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு இதுபற்றி விசாரணை நடத்துவதற்காக அனுப்பப்பட்டார்.

இந்த உத்தியோகஸ்தர் மேயர் உட்பட எல்லோருக்கும் இதுபற்றி அறிவித்தபின் 21-11-62-ல் விசாரணையை நடத்தினர். விசாரணை மூன்று நாட்கள்வரை நடைபெற்றது. இதன் பின்னர் உதவிக் கமிஷனர் அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கையின் இறுதிப் பகுதி பின்வருமாறு.

விசாரணையின்போது பலர் தெரிவித்திருந்த அபிப்பிராயத்தின்படி தற்போதுள்ள நிலையை நீடிக்கவிடுவது நல்லதல்ல. இது சம்பந்தமாக கற்றறிந்த யாழ்ப்பாணத்து மாவட்ட நீதிபதி ஒருவர் குறிப்பிட்டு பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் .(யாழ்ப்பாண மாநகரசபையின் எஞ்ஜினியர் ஒருவர்மீது மேயர் தொடர்ந்திருந்த வழக்கு விசாரணையில் குறிப்பிடப்பட்டது).

இந்த அறிக்கையை சமர்ப்பிக்கையில் ஸ்தலஸ்தாபன கமிஷனர் தெரிவித்ததாவது:-

'திறமையற்ற தவறான நிர்வாகம் நடைபெற்றுவருவதால் மாத்தறை, காலி ஆகிய இடங்களில் செய்ததுபோன்று நிர்வாகப் பொறுப்பை ஏன் இவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்கான காரணத்தை (மாநகரசபை) தெரிவிக்குமாறு இந்த அங்கத்தவர்களைக் கோரினல் என்ன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.'

இவ்விதம் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தும் மந்திரி மாநகரசபையைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. நகரசுத்தி தொழிலாளர்கள், மலசுத்தி தொழிலாளர்கள் ஆகியோரின் வேலைநிறுத்தத்தில் சமரசமான தீர்வு ஒன்று காண்பதற்கு அவகாசம் கொடுக்கப்படவேண்டுமென மந்திரியினல் உத்தரவிடப்பட்டது.

இதன்படியே சில நாட்களுக்குப்பின் நகரசுத்தி தொழிலாளர்களும் மலசுத்தி தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பினர். மாநகரசபைக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

புதிய வட்டார அமைப்பு யாழ்ப்பாண எம். பி.க்கு சாதகமாக அமைக்கப்பட்டதென குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கீழ்க்காணும் விஷயம் தெரிவிக்கப்படுகிறது.

"யாழ்ப்பாண மாநகர சபையில் திரு. கே. எஸ். நடராஜா வினல் கொண்டுவரப்பட்ட ஒரு பிரேரணை 16-11-62-ல் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் வருமாறு: யாழ்ப்பாண மாநகரசபை எல்லையுள் கரையோரப் பகுதிகளுக்கு மாநகரசபையில் போதியளவு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. மேற்படி பகுதிகள் மாநகரசபைக்கு மேலும் இரண்டு அல்லது மூன்று பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மாநகர சபை கோருகிறது.

இதற்கான பிரேரணை எதுவித திருத்தமுமின்றி சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு ஆதரவு தேடும் வகையில் மாவட்ட வரி வசூலிக்கும் அதிகாரி, உதவி தேர்தல் அதிகாரி, ஸ்தலஸ்தாபன உதவி கமிஷனர் ஆகியோரின் கருத்துக்கள் பெறப்பட்டன. இந்த உத்தியோகஸ்தர்களுடன் ஆலோசனை செய்தபின்னர் மாநகரசபை எல்லையுள் மேலும் இரு வட்டாரங்களை உருவாக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்விதம் இரு புதிய வட்டாரங்கள் உருவாக்கப்படுவது குறித்து யாழ்ப்பாணம் மாநகரசபையில் எதுவித ஆட்சேபமோ எதிர்ப்போ இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

—

## சமரசசபை

கொழும்பு, ஞாயிறு

"ஏழை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது சமரசசபையின் கடமையாகும். சமரச சபையைச்சேர்ந்த அங்கத்தவர்கள் தங்களது கடமைகளைச் சரிவரச்செய்யாது, தகராறுகளை சமரசமாகத் தீர்த்து வைப்பார்கள் என்றே நான் நம்புகின்றேன்" என்று நேற்று நடைபெற்ற சமரச சபைத் தலைவர்கள் சங்கத்தின் முதலாவது ஆண்டுக்கூட்டத்தில் நீதிமந்திரி திரு. சாம். பி. ஸி. பெர்ணண்டோ பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கிராமத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதில் இச்சபை முனையவேண்டுமென்றும் கிராமங்களில் சமாதானம் நிலவினல்தான் எமது நாட்டிலும் சமாதானம் நிலை பெறும் என்றும் குற்றங்களை குறைப்பதற்கு இந்தச் சபை தன்னல் ஆன உதவிகளைச் செய்யவேண்டுமென்றும் கூறினர்.

## விமானத்திருந்தபடி வேட்டை!

நியூயோர்க், ஏப். 7

அமெரிக்காவின் மேற்குப்பகுதி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் முன்னர் குதிரையில் சென்று கால்நடைகளை வேட்டையாடி வந்தனர். பின்னர் இலகுவான டிரக்குகளைப் பயன்படுத்தினர். இப்போதோ அவர்கள் ஹெலிகாப்டர் விமானங்களில் சென்று வேட்டையாடுகின்றனர் என்று அரிசோன மாநில,

விவசாயத்துறை அறிவிக்கிறது. ஒரு மந்தையில் பிடித்தமான இளங்காளையொன்றை ஹெலிகாப்டர் விமானத்திலிருந்தபடியே சுட்டு, அப்படியே விமானத்திலிருந்தபடி அதை உயரத் தூக்கிக்கொண்டு செல்கின்றனர்.

## செய்தித் திரட்டு

### 'கருணை வேண்டும்'

கொழும்பு, ஞாயிறு

"கருணையுடன் நடந்துகொள்ளும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தான் தமது சேவையில் வெற்றிகாண்கிறர்கள் என்பதை அனுபவம் எமக்குக் காட்டியுள்ளது" என பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ். ஏ. திஸநாயகா பொலிஸ் உத்தியோகஸ்தர்களாக சித்திபெற்றவர்களின் அணியின் மரியாதையை ஏற்றுப் பேசுகையில் கூறினர்.

∴ ∴ ∴

### 'கல்விநிலை சீர்குலைகிறது'

பிலியாந்தலை; ஞாயிறு

இன்று கல்வி மிகவும் குழப்பமான நிலையில் இருப்பதாகவும் நாளுக்குநாள் இவ்வித நிலை மோசமாகிக் கொண்டு வருவதாகவும் வருவதாகவும் கெசபுவ எம். பி. திரு. சோமவீர சந்திரசிறி பிலியந்தலை பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டார்.

∴ ∴ ∴

### ஆசிரியர்கள் நன்கொடை

மீரிகாமம், ஞாயிறு

மீரிகாமம் ஆசிரிய பயிற்சி கலாசாலையைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியர்கள் அரசாங்கத்துக்கு நன்கொடையளிக்கும் முகமாக, நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகெல்லாவுக்கு ரூ. 370 அனுப்பியுள்ளனர்.

∴ ∴ ∴

### வேலைநீக்கம்

ரூகம, ஞாயிறு

அரசாங்க ஆஸ்பத்திரி பணியாளர் யூனியனின் உபதலைவரும் ரூகம மார்புநோய் சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்தவருமான திரு. எல். டி. ஜேம்ஸ் சில்வா தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

### உயிருடன் குழந்தை புதைக்கப்பட்டது

கல்முனை, ஞாயிறு

பிரசவத்தின் சிறிது நேரத்துக்குப்பின்னர் ஒரு பச்சிளம் குழந்தையைப் புதைத்தது சம்பந்தமாக மகுலம் சின்னப்பா என்ற பெண்ணை கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர். பிரேத பரிசோதனை நடத்திய மாவட்ட வைத்திய அதிகாரி, சுமார் இரண்டு நாட்களுக்கு முன்னர் உயிருடன் குழந்தை புதைக்கப்பட்டிருப்பதாகக் கூறினர்.

# ஆரிய திராவிடபாஷா விருத்தி சங்கத்தின் சேவை

## ஆண்டுக் கூட்டத்தில் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் உதவிக் காரியதரிசியாக நீண்டகாலம் இருந்த வித்துவான் எஸ். ஆர். கந்தசாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து 3 நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

உபதலைவர்கள்: திருவாளர்கள்: சு. நடேசபிள்ளை, சி. உ. சோமசேகரம், வே. நாகலிங்கம், உதவிக் காரியதரிசி: பண்டிதர் செ. துரைசிங்கம், தனதிகாரி: திரு. க. நாகலிங்கம், நிர்வாக சபையினராகப் பண்டிதர்கள்: சோ. இளமுருகனர், க. சச்சிதானந்தம், க. கிருஷ்ணபிள்ளை, ச. பஞ்சாட்சர சர்மா, ச. பொன்னுத்துரை, வித்துவான் சி. ஆறுமும் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. கந்தசாமி, ஆசிரியரும் கல்வியும் என்பதுபற்றிப் பேசினர்.

தமிழ்ப் பால பண்டித பரீட்சையில் முதலாம் பிரிவில் முதலாவதாகத் தேறிய செல்வி நா. பொன்னரியத்துக்கு முன்னுள் தபால் தகவல் அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை உபகரித்த தங்கப் பதக்கத்தை உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் வழங்கினர். பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு தராதரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இச்சங்கம் கடந்த முப்பது வருடகாலமாக ஆற்றிய பெருந்தொண்டால் இன்று பெருமைப்படத்தக்கவகையில் இலங்கை முழுவதிலும் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பல பேரறிஞர்கள் தோற்றியுள்ளனர். இச்சங்கம் பரீட்சைகளை நடத்தும் திறமையையும் நேர்மையையும் நடுநிலைமைகளையும் சபை பாராட்டுகிறது. இச்சங்கத்திற்கு மாறுக வண்ணை நாவலர் பாடசாலை ஆசிரியர் சங்கம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்திற்கு தெரிவித்த ஆலோசனைப் பிரேரணைகள்பற்றிய செய்தியை இச்சங்கம் கண்டிக்கின்றது என்று கூறும் தீர்மானமொன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

காரியதரிசி திருமதி ஞே. செ. பாமரை பொதுச் சபை பெரிதும் பாராட்டியது.

## சந்திர மண்டல வாகனம்

நியூயார்க், ஏப். 6

சந்திர மண்டலத்தில் மனிதர்கள் செல்வதற்கான வசதிகளைக்கொண்ட போக்குவரத்து வாகனங்களைச் செய்ய, அமெரிக்காவைச் சேர்ந்த கிரிஸ்லர், ஜெனரல் மோட்டார்ஸ் ஆகிய கார் கம்பெனிகள் திட்டமிட்டு வருகின்றன. இந்த வாகனங்கள் "எல். ஆர். வி. எஸ்" (சந்திர மண்டலம் சுற்றும் வண்டி) என அழைக்கப்பெறும்.

கிரிஸ்லர் நிறுவனம் செய்யப்போகும் வண்டிக்கு ஆறு சக்கரங்கள் உண்டு. இரண்டு பேர் 32 மணி நேரம் உயிர் வாழத்தக்க வசதிகள் அதில் இருக்கும். இதில் டர்பைன் எந்திரமும், அதற்குஎரிபொருளாக நீர்வளி, உயிர் வளி ஆகியவற்றின் திரவமும் இருக்கும். இந்த வாகனம் 3 1/2 அடிஉயரமுள்ள தடைச் சுவற்றைக்கூடத் தாண்டிவிடும்.

ஐந்தடி விட்டமுள்ள இவ்வாகனத்தின் இரு பெருஞ் சக்கரங்களில் அவை தாமாகவே வழியறிந்து உருளுவதற்கான சக்தி தரும் மின்சார மோட்டார்கள் பொருத்தப்பட்டிருக்கும்.

## லாவோஸ் நிலைமை

### ஜார்ஸ்வெளியில் மீண்டும் சண்டை

வியன்டைன், ஏப். 7

மத்திய லாவோசில் ஜார்ஸ்வெளியில் நடுநிலைமை வாதிகளுக்கும் பதட்லாவோவினருக்குமிடையில் நேற்று தொடர்ந்து கைகலப்பு ஏற்பட்டது.

மீண்டும் சண்டை தொடங்கியுள்ள ஜார்ஸ்வெளிக்கு இந்தியா, கனடா, போலந்து ஆகியமூன்றுநாடுகளை கொண்ட சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் பிரதிநிதிகள் சென்று நடுநிலைமைத் தளபதி கொங்லீயைச் சந்தித்தனர். பதட்லாவோ தளபதியைச் சந்திக்க முடியாது போய்விட்டது.

ஜார்ஸ்வெளிக்கு தாமும் உதவிப் பிரதமரும் நேரில் சென்று அங்குஅமைதியைநாட்டுமாறு வேண்டுகோள் விடுக்கப்போவதாக லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவன்னபூமா தெரிவித்தார்.

—

## ஒலிம்பிக் விளையாட்டில்

### ஈராக் கலந்து கொள்ளாது

லாவுசேன், ஏப். 7

1964-ம் வருடம் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் ஈராக் கலந்துகொள்ளமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டுக்களில் கலந்துகொள்ள முடியாதபடி இந்தோனேஷியா சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் தடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தோனேஷியாவுக்கு ஆதரவாக ஈராக ஒலிம்பிக் விளையாட்டுக்களில் கலந்து கொள்வதில்லை என முடிவுசெய்தது.

—

## பிரிட்டனுக்கு 100போலாரிஸ் ஏவுகணைகள்

வாஷிங்டன், ஏப். 7

பிரிட்டன் தனது நீர்மூழ்கிக் கப்பல்களில் பொருத்துவதற்கு 100 போலாரிஸ் ஏவுகணைகளை அமெரிக்காவிடம் வாங்கவிருக்கிறது. இதற்கான ஒப்பந்தமொன்று நேற்று வாஷிங்டனில் கைச்சாத்திடப்பட்டது.

---

ஈராக் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி டோக்கியோவிலுள்ள நிர்வாகக் கமிட்டி டோக்கியோவிலுள்ள நிர்வாகக் கமிட்டிக்கும் ஈராக் வெளிவிவகார அமைச்சுக்கும் இதுபற்றி அறிவித்துள்ளது.

வலி-கிழக்கு

## பேச்சு, சங்கீத போட்டி முடிவுகள்

உடுவில், ஞாயிறு

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கம் நடத்திய 1963-ம் வருட பேச்சு-சங்கீதப் போட்டி முடிவுகள் விபரம் வருமாறு:-

**பேச்சு மேற்பிரிவு**

ஆண் (ஆங்கிலம்): ஜே. இராஜேந்திரம், பி. மகாதேவன், ஏ. எஸ். குலநாயகம்.

பெண் (ஆங்கிலம்): கே. விமலாதேவி, கே. தங்கம்மா, ஈ. புஸ்பலீலாவதி

தமிழ்: கே. எஸ். தேவராசா, என். மல்லிகாதேவி, கே. ஸ்ரீ சோமாஸ்கந்தமூர்த்தி, ஈ. பார்வதி, கே. இராசையா, எம். உருக்குமணி.

**மத்தியபிரிவு**

ஆங்கிலம்: பி. பாக்கியநாதன், கே. வசந்தகுமாரி, ஆர். சந்திரன், என். வாலாம்பிகை, கே.பத்மநாதன், ஆர்.ஜெயந்தி.

தமிழ்: வி. தவகோபாலசிங்கம், ஆர். புஸ்பகாந்தி, ஏ. புண்ணியமூர்த்தி, ஏ சகுந்தலாதேவி, எஸ காந்தராசா, கே. மனோன்மணி.

**கீழ்ப்பிரிவு**

ஆங்கிலம்: எல். செல்வநேசன், கே. சாந்திமலர், எஸ. பாலகுமாரன், எஸ. சந்திரதேவி, என். இராஜன், எஸ. காந்திமதி.

தமிழ்: வி. ஸ்ரீ பத்மநாதன், ஏ. தேவரஞ்சிதம், எஸ. இரத்தினசிங்கம், கே. சிவயோகமணி, டி. இரவீந்திரதாஸ், டி. ஹேமாஜினி.

**சங்கீதம் மேற்பிரிவு**

தனிப்பாட்டு: எஸ. ஜெகதீசன், எஸ. செல்வராணி, கே. கனகசிங்கம், ஆர். நளினி, ஆர். யோகமணி.

**கீழ்ப்பிரிவு**

ஆர். மாலினி, எஸ. செல்வராஜேஸ்வரி.

ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்., அச்சுவேலிக் கிறிஸ்தவ கல்லூரி., அததியார் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி, புன்னாலைக்கட்டுவன் ஆங்கிலபாடசாலை ஆகிய கல்லூரிகள் இப்போட்டியில் கலந்து கொண்டன.

## 'லங்கா' பெட்ரோல் விநியோக விஸ்தரிப்பு

### அமைச்சு ஆராய்கிறது

கொழும்பு, சனி

'லங்கா' பெற்றோல் விநியோகத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு வர்த்தக போக்குவரத்து அமைச்சு ஆலோசனை செய்து வருகிறது.

இது சம்பந்தமாக திரு. டி. பி. இலங்கரத்ன இவ்வாரமுற்பகுதியில் மகாநாடொன்றை நடத்தினர்.

இங்கு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ரோம் நாட்டின் உதவியைப் பெறும் நோக்கத்துடன் அங்கு செல்லவிருக்கும் கோஷ்டிக்கு கைத்தொழில் உள்நாட்டுக் கலாசார மந்திரி திரு மைத்திரிபால சேனநாயக்கா தலைமைதாங்கும்படி கோரப்பட்டுள்ளார்.

இதற்கிடையே ஜாஎலப் பகுதியில் எக்காலா என்னுமிடம் எண்ணெய் சுத்திசரிபபு நிலையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. ஹெந்தாலை, கொலன்னாவை ஆகிய இடங்களும் இவ்வித நிலையம் அமைக்க ஏற்ற இடம் என கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 8-4-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 மூவர் இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 ஏ. நமசிவாயம் ஆர். முத்துசாமி — புல்லாங்குழல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ்மூலம் சிங்களம், 9 30 இசையமுதம், 9-45 சரஸ்வதி ராக்கியராஜா—பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 1-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிபாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய சங்கீதம், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 கோயம்புத்தூர் சி. ராஜலக்ஷ்மி—பாட்டு, 8-15 கம்பன் திருநாள் (காரைக்குடி அஞ்சல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 கோயம்புத்தூர் சி. ராஜலக்ஷ்மி—பாட்டு.

மாலை 4-45 விவதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 இலக்கிய ஏடு, 7-40 திரைப்பட இசை, 8-00 நமது கடமை—பேச்சு, 8-15 லயவின்யாசம், 8-30 இசைக் கோவை, 8-45 தேசபக்திப் பாடல்கள், 9-30 பாட்டு.

## மயிலிட்டி மீனவர் கோடிக்கரையில் கைது!

யாழ்ப்பாணம், ஞாயிறு

மயிலிட்டியைச் சேர்ந்த இரு மீனவர்கள் இந்தியக்கரையில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் எனக் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மயிலிட்டியைச் சேர்ந்த வைரமுத்து, சுப்பையா ஆகிய இரு மீனவர்களும் இயந்திரப்படகில் மீன்பிடிக்கச் சென்றனர். ஒருவாரகாலத்துக்கு மேலாகியும் அவர்கள் கரைக்குத் திரும்பவில்லை. இயந்திரக் கோளாறு காரணமாக அவர்களிருவரும் இந்தியகக்கரையை அடைந்தனர் எனவும், அங்கு அவர்கள் தோப்புக்காடு சுங்க அதிகாரிகளால் சட்டவிரோத குடியேற்றக்காரர் எனக்கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து உண்மையைத் தெரிவிக்கும்படி காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயத்திடம் மயிலிட்டி மக்கள் அறிவித்திருப்பதாகவும் தெரிகிறது.

## மல்யுத்தப் போட்டி

உடுப்பிட்டி, சனி

அல்வாய்தெற்கு, பாரதி விளையாட்டுக் கழகத்தினரால் மல்யுத்தப் போட்டி ஒன்று இம்மாதம் இறுதியில் நடைபெறும்.

வெற்றிபெறுவோருக்கு முன்னள் பருத்தித்துறை எம். பி. காலஞ்சென்ற பொன். கந்தையாவின் ஞாபகார்த்தக் கிண்ணம் பரிசளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

## ஆனந்தனுக்கு 'பட்டம்'

உடுப்பிட்டி, சனி

நெல்லியடி சனசமூக நிலையத்தின் 15-வது ஆண்டு விழாவன்று 'நீச்சல் வீரன்' ஆனந்தனுக்கு 'ஈழத்து இளந்திரை' என்ற பட்டத்தை அளிப்பதெனவும், வெள்ளிக்கிண்ணம் அளிப்பதெனவும் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## கருத்து வெளியிட்டது

### யு. என். பி.தலைவர்ரல்ல!

கொழும்பு, சனி

மொழிப் பிரச்சினையைத் தீர்க்க வட்டமேசை மகாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டுமென திரு, ஜி. ஜி. பொன்னம்பலம் வெளியிட்டிருந்த அபிப்பிராயத்துக்கு சார்பாக யு.என் பி. தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா கருத்து வெளியிட்டிருந்ததாகக் குறிப்பிட்டு சில பத்திரிகைகளில் வந்த செய்தி சரியானதல்ல வென்றும் அவ்வித கருத்து யு.என்.பி. பத்திரிகையான 'சியரட்டா' என்ற பத்திரிகையில் வெளி வந்த ஆசிரியர் தலையங்கத்தின் கருத்து எனவும் யு என். பி. யைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்


விலையில் மலிவானது... பாவிக்கச் சிக்கனமானது...




உங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் ஏற்ற பானம்!

வரவுக்குள் செலவைக் கட்டுப்படுத்த வேண்டுமா? அப்படியென்றல் நீங்கள் ஸல்லுக்கு ஆசி கூறுவீர்கள். அது சாதாரண மோல்டட் பால் விதங்களை விட விலையில் அதிகமில்லை. அது பாலுக்கும் சீனிக்கும் செலவாகும் பணத்தை மிச்சமாக்குகிறது! உங்கள் குடும்பத்தார் ஸல்லைப் பருகி பெறும் இன்ப அனுபவத்திற்காக உங்களை வாழ்த்துவார்கள்! வேறெந்த மோல்டட் பாலுக்கும் இதைப்போன்ற சுவையில்லை—பாலாடையின் சுவை, மிகுந்த பரவச மூட்டும் தித்திப்பு! நீருடன் கலந்து பால்போலப் பருகலாம் அல்லது டீ, கோப்பியுடன், பாலுக்குப் பதிலாகச் சேர்த்துக்கொண்டும் பருகலாம். ஸல் உடன் கரைந்து விடுகிறது!

குடும்பத்தார் உடன் விரும்புவது

ஸல் உடன் கரையும் மோல்டட் பால் ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

JWT ... 1954

## கூரையை உயர்த்தவேண்டும்!

லண்டன், ஏப். 6

பிரிட்டனில் வருங்காலத்தில் மக்கள் உயரமாக வளர்வார்கள் என்பதை மனதிற்கொண்டு, கட்டடங்களின் கூரைகளை எட்டடிக்குக் குறையாமல் கட்டவேண்டுமென்று சோசலிஸ்டு உறுப்பினரான எட்வின் வெயின்ரைட், வீட்டு வசதித்துறை அமைச்சரைப் பாராளுமன்றத்தில் கேட்பார் என்று தெரியவருகிறது. "முப்பதாண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட தற்போது பிரிட்டிஷ் குழந்தைகள் உயரமாக இருக்கிறார்கள். இனிவருங்காலத்தில் அவர்கள் இன்னும் உயரமாக வளரக்கூடும்" என்று அந்தப்பாராளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

—

## வித்தியாசாலையை மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

கட்டுவன் பாலர் ஞானோதய வித்தியாசாலையை கட்டுவன் மயிலிட்டி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்திற்கு மாற்றித் தரும்படி பாலர் ஞானோதய சங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## நங்கையர் பணிக்குழு

கொழும்பு, ஞாயிறு

இலங்கை நங்கையர் பணிக்குழு தனது வருடாந்த பொருட்காட்சியை இலங்கை தேயிலைப் பிரசாரப் பகுதிக் கந்தோரில் நாளை திங்கட்கிழமை ஆரம்பித்து நடத்தவிருக்கிறது. புதுவருடத்திற்கான துணிவகைகள் இப்பொருட்காட்சியின் போது விற்பனை செய்யப்படவிருப்பதாகத் தெரிகிறது.

—

## கிராமியக் கலைவிழா

கட்டுவன், ஞாயிறு

மயிலிட்டி தெற்கு வர்த்தக விழாபாலர் ஞானோதய சங்கம் கிராமியக கலைவிழா ஒன்றினை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. இம் மாதம் 12, 13-ம் திகதிகளில் இக்கிராமியக் கலைவிழா நடைபெறவிருப்பதாக தெரிகிறது.

—

## 50பேரப்பிள்ளைகளுடைய பாட்டி

நியூயார்க், ஏப்ரல்.6

மார்கரடரணன் என்னும் பாட்டிக்கு 75 வயதாகிறது. அவள் பிலடெல்ஃபியா நகரத்தில் வாழ்கிறாள். இவள் அண்மையில் 50-வது முறை டாட்டியாள்.


**புத்தாண்டின் புனித விருந்து!**

மக்கள் கண்குளிர இதயம் மகிழவருகிறது

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ரகலை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என......

நாடும் ஏடும் வாழ்த்துகிறது

நடிப்புலகம் போற்றுகிறது

காணத்துயாராகுங்கள்



★ சந்திரபாபு,

★ எம். என். ராஜம்

★ டி. எஸ். பாலையா

★ கே. சூரியகலா

★ ரி.எஸ்.துரைராஜ்

★ பி. எஸ். ஞானம்

★ ஜாவர்சீதாராமன்

சி டி. ராஜகாந்தம்

★கள்ளபார்ட் நடராஜ்

மற்றும் பலர் நடித்த

சிவகாமி பிக்சர்ஸ் 8·4·63

**குமார ராஜா**

திரைக்கதை-வசனம் முரசொலிமாறன் எம்: ஏ.

இசை டி.ஆர். பாப்பா

டைரக்ஷன் ஜி. கே. ராமு

நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்

பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

**4-வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு

மற்றும் 5 திரைகளில்

சிவாஜி கணேசன் சாவித்திரி

மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

**கப்பலோட்டிய தமிழன்!**

மனோகரா

(யாழ்ப்பாணம்)

சிவாஜி - ஜெமினி - சாவித்திரி—சரோஜாதேவி

நடித்த

**பார்த்தால் பசிதீரும்**

தமிழ்ப்டசும் படம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் -ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 'வடமொழியை கற்பது அவசியம்'

—உதவி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், திங்கள்

மொழியை வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். கலை, கலாச்சாரம், பண்பு என்பன நிறைந்த வாழ்க்கையே எமக்கு வேண்டும்.' என்று உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற வால்மீகி தினவிழாவில் பேசுகையில் கூறினார். நேற்று மாலை நடைபெற்ற இவ்விழாவிற்கு வியாகரண சிரோமணி திரு. டி. கே. சீதாராம சாஸ்திரிகள் தலைமை வகித்தார். உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"எல்லாப் பாஷைகளும் எம்மால் சிருஷ்டிக்கப்பட்டவையே' சமயத்திற்கு வடமொழி வேண்டும். எம்முடைய மொழியை அறிய அதிக சந்தர்ப்பம் உண்டு. ஒரு மொழியில் ஒருவன் பாண்டித்தியமடைய வேண்டுமாயின் சமஸ்கிருதமும் படித்திருக்க வேண்டும். இதிகாசங்களை நன்கு கற்றிருப்பின் நமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். இலக்கியப் படிப்பு அவசியமானது. சமஸ்கிருதம், தமிழ் இரண்டும் வளரவேண்டும்.

விஞ்ஞானத்தில் ஆற்றல் பெற வடமொழி உதவும். வடமொழி படிப்பதனால் கஷ்டமில்லை. கல்வி வாழ்க்கையைச் சரியானதாகவும் ஒருங்காகவும் நடத்த உதவவேண்டும். வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்க்க இலக்கியங்கள் உதவுகின்றன. தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய கல்வியே வேண்டும். வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவுவதே உண்மையான கல்வியாகும்."

## ஞானனந்தன்....

1-ம் பக்கத் தொடர்ச்சி

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

கொஸமஸ் ஞமக்ளி யூனியன் அல்வினஸ் என்பவர் விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினார்:- "கடந்தமாதம் 30-ம் திகதி சீனக்கப்பலைப் பார்க்கப் புறப்பட ஆயத்தமானேம். முதலாம் திகதி, சாப்பாட்டையுப் கட்டிக்கொண்டு, நானும் காலஞ்சென்ற ஞானனந்தனும், அல்போன்ஸ் என்பவரும் கடலில் குதித்து கப்பலை நோக்கி நீந்திச் சென்றோம். ஒரு வள்ளத்தில் எங்களது சாப்பாட்டை முடித்துக்கொண்டோம். பெரிய மீன் எங்களை எதிர்த்து வந்தது. எல்லாவற்றையும் சமாளித்துக்கொண்டு நீந்திச் சென்று கொண்டிருந்தோம். ஞானனந்தன் பின்னல் வந்துகொண்டிருந்தார் கப்பலை சமீபித்தபொழுது நாங்கள் ஞானனந்தனைத் தேடினேம். ஞானனந்தனைக் காணவில்லை. பிறகு படகு கொண்டு தேடினேம். அப்பொழுதும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மூன்றும் திகதி காலை மண்டைதீவு கடற்கரையில் ஞானனந்தனின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது."

அல்வினஸூம் கப்பலைப் பார்த்துத் திரும்பிய இரவு மயக்கமுற்றுக்கிடந்தார். என்றும் அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார் என்றும் அங்கு மயக்கம் தெளிந்ததென்றும் விசாரணையின்போது கூறப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் ஞானனந்தன் நீரில் மூழ்கி மரணமானர் எனத் தீர்ப்பளித்தார். பிரேத பரிசோதனையும் நடைபெற்றது.

# 'ஒத்துழைத்துக் கண்ட பலன் தெரிந்ததே!'

## திரு.இராசமாணிக்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

திரு. ஜி.ஜி. பொன்னம்பலத்தின் பேச்சு தெளிவின்றி சமாளிப்பும் கருத்துவேறுபாடுகளும் நிறைந்திருப்பதாக தமிழரசுக்கட்சித் தலைவர் திரு.எஸ். எம். இராசமாணிக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் தெரிவிததுள்ளார்.

திரு. இராசமாணிக்கம் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திரு. பொன்னம்பலம், தமிழர்கள் தமது மொழி உரிமையைப் பெறவும் மற்ற ஆதார உரிமைகளைப் பெறவும் தமது எதிர்ப்பைக் காட்டவேண்டுமென்று கூறிவிட்டு சிங்களவருடன் தமிழர் ஒன்றுபட்டு ஐக்கிய இலங்கையை உருவாகக வேண்டுமென்றும் இவ்வித ஐக்கிய இலங்கையில் சிங்களவரும் தமிழரும் சமசந்தர்ப்பத்துடன் வாழ்வார்கள் என்றார்.

திரு. பொன்னம்பலம் அரசாங்கத்துடன் பலகாலம் ஒத்துழைத்தார். ஆனல் முடிவில் ஒன்றும் பலிதமாகவில்லை.

சோல்பரி கமிஷன் காலத்தில் திரு. பொன்னம்பலம் தான் தமிழர் சமஅந்தஸ்துடன் வாழவேண்டுமென்றும் சிங்களவருக்குள்ள உரிமை தமிழருக்கு இருக்கவேண்டுமென்றும் கோரினர். இவ்விதம் கோரியவர்களுள் திரு. பொன்னம்பலம் முதலிடத்தைப் பெறுவார். இந்தப் போராட்டத்தில் வெற்றிபெருத போது அவர் அரசாங்கத்துடன் சேர்ந்து தமது ஒத்துழைப்பைக் கொடுத்தார். ஆனல் இவரது இந்த ஒத்துழைப்பால் தமிழர்களுக்கு என்ன கிடைத்துள்ளது?

தமிழரசுக் கட்சியும் அரசாங்கத்துக்கு தனது ஒத்துழைப்பைக் கொடுத்தது. ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில்,பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை சுதந்திரக் கட்சியினர் அமுல் நடத்துவார்கள் என்ற உறுதி அளித்ததின் பேரிலும் நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையிலுய் அவர்களுக்கு நாம் ஆதரவளித்தோம். மார்ச்மாதத்தில் நாம் யு. என். பி.யை ஆதரிக்கவில்லை. எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவது பற்றி அவர்கள் உத்தரவாதம் அளிக்காததாலேயே நாம் அவர்களுக்கு ஆதரவளிக்கவில்லை.

மார்ச் மாதத்திலும் ஜூலை மாதத்திலும் நடைபெற்ற பொதுத் தேர்தலிலுல் நாம் யு. என்.பி. யைத் தோற்கடிக்க உதவினேம். எமது ஒத்துழைப்பினல் ஏதேனும் உருவாகுமென்ற நம்பிக்கையில் தான் நாம் இவ்வாறு செய்தோம். நாம் சிம்மாசனப் பிரசங்கத்தில் கலந்துகொண்டோம். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மந்திரிகள் எதுவித தடையுமின்றி விஜயம் செய்தார்கள். நாங்கள் அவர்களை வரவேற்றோம்.

### உறுதியை நிறைவேற்றவில்லை

ஆனல் தொடர்ந்துநடைபெற்ற மூன்று மகாநாடுகளிலும் எமக்கு உறுதியளித்த விஷயங்களை நிறைவேற்ற அரசாங்கத்தினர் தவறிவிட்டார்கள்.

### மகாநாடு முறிந்தது

எனவே நாம் ஒத்துழைக்கவில்லை என எவ்விதம் குற்றம் சமத்த முடியும்?

### அரசாங்கத்துடன் தான் எமது எதிர்ப்பு

நாம் சிங்கள மக்களுடன் சமாதானமாகவே இருக்கிறோம். ஆனல் நாம் எதிர்ப்பதெல்லாம் அரசாங்கத்தைத் தான்.

### விடுதலை இயக்கம்

தமிழரசுக்கட்சி ஒரு அரசியல் கட்சியல்ல ஒரு விடுதலை இயக்கம்.

—

## தேர்த்திருவிழா

சுன்னகம், ஞாயிறு

சுன்னகம் ஐயனர் கோவில் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. உற்சவ நாட்களில் சமயச்சொற்பொழிவுகள் நடைபெற்றன.

—

## நடேசபிள்ளைக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

முன்னுள் தபால் தகவல் அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை செனட்டராக கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்டதனை, பாராட்டி ஸ்ரீலங்கா சைவாதீனம், வேதாகம சைவசித்தாந்தசபையின் கூட்டு விழாவில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரு சங்கங்களினதும் கூட்டு விழா அளவெட்டி பெருமாக்கடவை பிள்ளையார்கோவில் மண்டபத்தில் பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இரு சங்கங்களினதும் கிளை அளவெட்டியில் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது. கிளைச்சங்க நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர்: திரு. ச. முத்துச்சாமிஐயர், உபதலைவர்கள்: திருவாளர்கள் ஆ. மாணிக்கம், வ. சோமசுந்தரம், காரியதரிசி: திரு. எஸ். இராசையா, தனதிகாரி: திரு. ந. சிவராசா, 2 பேர் நிர்வாகசபை அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

—

## கிராமசபை உபதலைவர்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபை புதிய உபதலைவராக 8-ம் வட்டார அங்கத்தவர் திரு. அ. நன்னித்தம்பி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

—

## கமிஷன் முன் சாட்சியம்

கொழும்பு, ஞாயிறு

பேராதனையிலுள்ள இலங்கைப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சேர். நிக்கலஸ் அட்டிகல, நேற்றுக்காலை 9-30 மணிக்கு பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன் முன் சாட்சியமளிதாத்ர்.

## பாதுகாப்பு நிதி ரூ. 51½ கோடி

புதுடில்லி, ஏப்ரல் 7

இந்தியப் பாதுகாட்பு நிதிக்கு இதுவரை ரூ. 51.44 லட்சம் சேர்ந்துள்ளது. பிரிட்டனிலிருந்து ரூ. 28 லட்சமும், இதர நாடுகளிலிருந்து ரூ. 42 லட்சமும் இதில் அடங்கும் 20,70,345 கிராம் தங்கமும், நகைகளும் சேர்ந்துள்ளது.

## மரண அறிவித்தல்

வட்டுக்கோட்டை கிராமச் சபையின் முன்னுள் தலைவரான திரு. கே. சுப்பிரமணியம்(எம். பி. ஈ., ஜே. பி.) காலமாகிவிட்டார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்'